விலை ரூபா: 15.00

நகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது


Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 02 திங்கட்கிழமை (19.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 274

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# போர்க் குற்ற விசாரணைக்கு பிரித்தானியா ஆதரவு வழங்கும்

## இலங்கை அரசுக்குக் காலக்கெடு!



(லண்டன்) இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு பிரித்தானியா காலக்கெடு விதித்துள்ளதாக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கைக்கு எதிராக சூழ்ச்சி

### அமைச்சர் நிமல் குற்றச்சாட்டு



(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட அரச சார்பற்ற அமைப்புகள் இலங்கைக்கு எதிராக சூழ்ச்சி செய்வதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று சர்வதேச மன்னிப்புச் சபை உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகள் அழுத்தம் கொடுக்கும் நிலையில், இலங்கைக்கு எதிராக சர்வதேச மன்னிப்புச் சபையும் இதர மனித உரிமை அமைப்புகளும் செயற்படுவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குற்றம் சாட்டியுள்ளார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய சிக்கிமில் பாரிய பூகம்பம்

இந்தியாவின் சிக்கிம் மாநிலத்தில் நேற்று மாலை 6.8 ரிச்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேபாள மற்றும் சீன எல்லையிலுள்ள சிக்கிம் மாநிலத்தில் ஏற்பட்ட பூகம்பத்தினால் இந்தியாவில் 7 பேரும் நேபாளத்தில் 5 பேரும் பலியாகியுள்ளனர்.

இந்தியாவில் சிக்கிமில் நால்வரும் பீகாரில் இருவரும், மேற்கு வங்கத்தில் ஒருவரும் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# வன்னி இறுதி யுத்தத்தின் போது நாளொன்றுக்கு சராசரியாக ௬௩ பேர் பலி

## விக்கிலீக்ஸ் தகவல்

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது நாளொன்றுக்கு சராசரியாக 63 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக விக்கிலீக்ஸ் இணையம் புதிய தகவலை வெளியிட்டுள்ளது. யுத்த வலயத்திலும் அதற்கு வெளியேயும் உயிரிழப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் அந்நாட்டு இராஜாங்கத் திணைக்களத்திற்கு இந்தத் தகவலை அனுப்பி வைத்துள்ளது.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள தகவலில், 2009 ஜனவரி 20-ம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 06-ம் திகதி வரையில் 4 ஆயிரத்து 164 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக முன்னாள் அமெரிக்க தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் இராஜாங்கத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார்.

இந்தக் காலப் பகுதியில் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். எவ்வாறெனினும் நம்பகமான தரவு மூலங்களின் ஊடாக கிடைக்கப் பெற்ற பொதுமக்கள் இழப்பு குறித்த தகவல்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு பகிர்ந்து கொள்ளவில்லை.

ஜனவரி மாதத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 33 பொதுமக்கள் கொல்லப்பட்டதாவும், பெப்ரவரி மார்ச் மாதங்களில் இந்த எண்ணிக்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.பொதுச்சபை அமர்வில் ஜனாதிபதி அடங்கிய குழு

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 66 -வது அமர்வில் பங்கேற்பதற்காக நியூயோர்க்கிற்கு சென்றடைந்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் பீரிஸ் உள்ளிட்ட தூதுக்குழுவினர் எதிர்வரும் பொதுச்சபை அமர்வில் பங்கேற்கவுள்ளனர். இதன்படி ஜனாதிபதி எதிர்வரும் 22ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை அமர்வில் உரை நிகழ்த்தவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அவர் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூனை சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்ச்சைக்குரிய தருஸ்மன் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் ஜனாதிபதிக்கும் ஐக்கிய நாடுகள் பொது செயலாளருக்கும் இடையில் இடம் (20 ஆம் பக்கம் பார்க்க)



கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த லொறியொன்று நேற்று அனுராதபுரத்தில் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியைச் சேர்ந்த கே.வல்லிபுரம் (வயது 64) என்ற லொறி சாரதி ஸ்தலத்தில்பலியானார். (செய்தி 16ஆம் பக்கத்தில்)


வெள்ளி முதல் உங்கள் கைகளில்......
பத்திரிகை வடிவிலும்
கணினிக்களம்
அனைத்து விற்பனை நிலையங்களிலும் கிடைக்கின்றது




தொழில் நுட்ப வல்லுனர்கள் மற்றும் முன்னாள் கல்வி அதிகாரிகளின் இணைந்த வழிகாட்டலுடன் வெளிவருகின்றது
- சமகால தொழில் நுட்ப விடயங்கள்
- கணினி கற்கைநெறிக்கான வழிகாட்டல்
- க.பொ.த(சா/த) கணித, விஞ்ஞான மாதிரி வினாத்தாள்கள்

Hotline:077/8688517, 078/4727404, 075/8385895

# ஊடகவியலாளர் விவேகராசா காலமானார்



(வவுனியா)

வவுனியா மாவட்ட சுயாதீன ஊடகவியலாளர் தம்பு விவேகராசா நேற்று அதிகாலை காலமானார். அவருக்கு வயது 56.

கடந்த பத்து நாட்களாக சுகவீனமுற்ற நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சிகிச்சை பலன் இன்றி உயிர் இழந்துள்ளார்.

தம்பு விவேகராசா கடந்த 30 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் சேவையாற்றி வந்ததோடு வன்னி ஊடகவியலாளர் சங்கத்தின் செயலாளராகவும் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# புலிகளின் ஆயுதத்தைப் பயன்படுத்தி கொள்ளை முயற்சி; சிப்பாய் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைப் பயன்படுத்தி கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட படைச்சிப்பாய் ஒருவரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். தெஹியோவிட்ட பனாவல பிரதேசத்தில் இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

விடுதலைப்புலிகள் பயன்படுத்திய கைத்துப்பாக்கியொன்றை பயன்படுத்தி குறித்த படைச்சிப்பாய் கொள்ளைச் சம்பவங்களை மேற்கொள்ள முயற்சித்துள்ளார்.

விடுமுறைக்காக வீடுசென்றிருந்த படைச்சிப்பாயே இவ்வாறு கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த படைச்சிப்பாயுடன் அவரது மூன்று நண்பர்களும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். (ந-5)

IDM சாவகச்சேரி கிளை திறப்புவிழா நிகழ்வில் முற்றுமுழுதாக க.பொ.த உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்காக அவர்களின் எண்ணற்ற கல்வி தெரிவுகளை அடையும் வழிகாட்டல் நிகழ்வில் கணனிமுகாமைத்துவம் மற்றும் ஆங்கிலம் தொடர்பான கண்காட்சியை படங்களில் காணலாம். இக் கண்காட்சி இன்றும் நடைபெறும்.





# அரசு தீர்வை வழங்கவே மாட்டாது; கூட்டமைப்புக்கு பேசவேண்டிய நிர்ப்பந்தம்

தமிழர்களாகிய நாம் இன்று மிகவும் பலவீனமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். அதேவேளை, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்ற அழுத்தம் இன்று அரசு பக்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சர்வதேசத்தால் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என புளொட் அமைப்பின் தலைவர் ரி.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பேச்சுவார்த்தை என்ற ஒன்றின் மூலமே எதனையேனும் அடைய முடியும் என்ற அடிப்படையில்சர்வதேசம் இவ்வாறான அழுத்தத்தை இருதரப்புக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

அதிலும் விசேடமாக,அரசின் பக்கமே இந்த அழுத்தம் அதிகரித்துக் காணப்படுகிறது. இவ்வாறானதொரு நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசுடன் பேசுவதன் மூலமே ஒரு தீர்வுக்கு வரமுடியும் என்றும் சர்வதேசம் நம்பிக்கை கொண்டுள்ளது.

ஆனால், இலங்கை அரசானது எமது மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணும் என்று நாமோ, தமிழ் மக்களோ நம்பிக்கை கொள்ளவில்லை.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள மறுப்புத் தெரிவிக்குமாக இருந்தால் அது அரசுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாகவே முடியும் என புளொட் இயக்கத்தின் தலைவரான ரி.சித்தார்த்தன் தெரிவித்தார். (ந-5)

# இரண்டு வருடங்களுக்கு முன் ஆஸி.சென்றவர்களை காணவில்லை

## உறவினர்கள் கவலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து இரண்டு வருடங்களுக்கு முன்னதாக சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு சென்ற சிலரை இன்னமும் காணவில்லை என்று உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பயண முகவர்களிடம் 10 முதல் 20 இலட்சம் ரூபாய் வரை பணம் கொடுத்து 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் இவர்கள் பயணித்ததாகவும் ஆனால் அவர்கள் சட்டவிரோதமாகவேஅனுப்பிவைக்கப்பட்டதாகதமக்கு பின்னரே தெரியவந்ததாகவும் உறவினர்கள் கூறியுள்ளனர்.

கொழும்பில் இருந்து அவர்கள் சிங்கப்பூருக்கு விமானம் மூலம் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் பின்னர் சிங்கப்பூர், மலேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய இடங்களில் இருந்துதொடர்புகொண்டஅவர்கள்தாம்இந்தோனேசியா ஊடாக கடல் வழிப் பயணமாக அவு[illegible] திரேலியா செல்லவுள்ளதாக தமக்கு[illegible] வித்ததாகவும் உறவினர்கள் கூறுகின்[illegible].

ஆனால் அதன் பிறகு அவர்களிடம் இ[illegible]து தமக்கு தகவல் எதுவும் கிடைக்கவில்[illegible]ல என்று உறவினர்கள் கூறுகிறார்கள். [illegible]து கணவர்மாரை இவ்வாறு அனுப்பி [illegible]த பல பெண்கள் தாம் இது குறித்து அனைத் துலக செஞ்சிலுவை சங்கம் உட்பட பல அமைப்புக்களிடம் முறையிட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

இப்படியான கடல் வழிப் பயணங்களில் பலர் நடுக்கடலில் உயிரிழந்தமை குறித்து ஏற்கெனவேபலதகவல்கள்கிடைத்திருக்கின்றன.

செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று இவ்வாறு கடல் வழிப்பணயத்தை ஆரம்பித்த 44 பேர் கல்முனையில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# இலங்கையில் நடந்த போர்க்குற்றம் சென்னையில் இன்று கருத்தரங்கு

(சென்னை)

இலங்கை இராணுவத்தினாலும், இந்திய அமைதிகாக்கும் படையினாலும் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு நீதி வழங்கக் கோரும் கூட்டம் ஒன்று சென்னையில் இன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தமிழர்களை பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டில் சென்னை லயோலா கல்லூரியில் இன்று 19 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் இந்தக் கூட்டம் நடைபெறும். சென்னைப் பல்கலைக்கழக அரசியல் மற்றும் பொது நிர்வாகத்திணைக்களத்தின்பேராசிரியர்ராமுமணிவண்ணன்தலைமையில் நடைபெறவுள்ள இந்தக்கூட்டத்தில் தோழர் தியாகு, விடுதலை இராசேந்திரன் ஆகியோர் முக்கிய பேச்சாளர்களாக பங்கேற்கவுள்ளனர்.

1987 இல் இந்திய அமைதிப்படை இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் தமிழர்களுக்கு இழைத்த கொடூரங்கள், ராஜீவ்காந்தியின் படுகொலை, இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் மகிந்த ராஜபக்ஷ நடத்திய இன அழிப்புப் போர், அதன் விளைவாக பல இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டமை ஆகியவற்றை மையப் படுத்தியே இந்தக் கருத்தரங்கிற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதை தடுக்க ராஜீவ்காந்தி படுகொலை விவகாரத்தை கிளப்பி விட்டு மக்களை திசை திருப்ப காங்கிரஸ் கட்சி மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிக்கவே இந்திய அமைதிகாக்கும் படையின் கொடூரங்களைக்கையில் எடுத்துள்ளதாக தமிழர்களைப்பாதுகாக்கும் அமைப்பின் இணைப்பாளரும் மென் பொருள் நிபுணருமான ரி.செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூவரதும் மரண தண்டனையை நிறுத்த வேண்டும் என்று மனிதஉரிமைகள் செயற்பாட்டாளர்கள் கோரி வருகின்ற நிலையில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் அவர்களை தூக்கிலிட வேண்டும் என்று வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இந்திய அமைதிகாக்கும் படையினரால் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் பல பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

1990 இல் இந்திய அமைதி காக்கும் படையினர் இந்தியா திரும்பியபோது அவர்கள் தமிழர்களுக்கு இழைத்த கொடூரங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்நாடு முதல்வராக இருந்த கருணாநிதி அவர்களை வரவேற்கச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)


## பணியாளர் தேவை

கரவெட்டி பிரதேசத்தில் வசிக்கும் அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று பணி புரியக் கூடிய பெண் பணியாளர் தேவை. விருப்பமுள்ளவர்கள் பின்வரும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.இல: 0776341216


# இந்திய மீனவர்களின் அத்துமீறல் தடுக்கப்படும் – அமைச்சர் ராஜித

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப்பிராந்திய மீனவ மக்களுக்குரித்தான மீன்வளங்களை இந்திய மீனவர்கள் அபகரித்துச் செல்லாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன உறுதியளித்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளருடன் கலந்துரையாடியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி இலங்கை கரையோரக் காவல் படையினரால் நாட்டு எல்லைக்குள்வரும் வெளிநாட்டு மீனவர்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ந-9)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1981 11 14



ஆண்டவன் அடியில் 2008 09 21

## சண்முகலிங்கம் றமேஸ்

ஒரு நிமிடம் கூட எமைப் பிரிய விரும்பாத உன்னை மூன்று வருடங்கள் எம்மால் எப்படி பிரிந்து இருக்க முடியும் எங்கள் அன்பு றமேஸ்.
ஆண்டுகள் பல போனாலும் அசையாமல்
என்றும் எங்கள் நெஞ்சில் நிலைத்துள்ளாய்.

குடும்பத்தினர்

4ம் வட்டாரம், முள்ளியவளை. [சி-4489]

# இன்று ஒரு தகவல்

## தடைக்கல்லும் படிக்கல்லாகும்

"வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால்... அதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று ஒருவர் கேட்டார்.

"வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால் கடுமையாக உழைக்க வேண்டும் அது தான் சரியான வழி" என்று இன்னொருவர் கூறினார்.

தனக்கு அது தான் சரி என்று தென்படுவதாக சொன்னார்.

ஆனால் நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"வாழ்க்கையில் முன்னேற கடின உழைப்பு என்பது முக்கியமில்லை... சில நேரங்களில் சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி திடீரென்று எடுக்கும் முடிவுகள் தான் முக்கியம்!" அதற்கு உதாரணமாக நிகழ்வுகளையும் கூறுகிறார்கள்.

ஒரு ஊரிலே பாடசாலை ஒன்றில் மாணவன் ஒருவன் கல்வி கற்றுவந்தான். அப்பாடசாலையில் கல்வி அவனுக்கு சரியாக அமையவில்லை. ஆனால், பரீட்சை எழுதினான்.

ஒரு பாடத்திலும் சித்தியடைவில்லை. சகல பாடத்திலேயும் குறைந்த புள்ளிகள் மட்டுமே பெற்றான்.

அவன்மேல் தலைமையாசிரியருக்கு கோபம் வந்தது.

"இதோ பார்... இந்தப் பாடசாலையில் 10 வருடங்களாக நீ கல்வி பயின்று வருகிறாய் அப்படியிருந்தும் கூட ஒரு பாடத்தில் கூட சித்தி பெறவில்லை. ஆசிரியர் பாடம் கற்பிக்கும் போது காதில் பஞ்சை அடைத்து வைத்திருந்தாய்? என்று ஆசிரியர் அதட்டினார்.

அதற்கு மாணவன் எதுவும் கூறாமல் நின்றான்.

"இனிமேல் நீ இந்தப் பாடசாலையில் கல்வி கற்க முடியாது. உனக்கு எதுவும் சரிவராது உன்னுடைய பிறப்புச் சான்றிதழ்" என்று கையில் கொடுத்து பாடசாலையை விட்டு வெளியில் அனுப்பி வைத்தார்.

அந்த மாணவன் எதுவும் திரும்பிக் கூறாமல் அதனை வாங்கிக்கொண்டு வெளியே வந்தான்.

ஆசிரியர் கூறியது அவனது காதில் மீண்டும் எதிரொலித்தது.

அது திரும்பத் திரும்ப மனதிலும் எதிரொலித்தது.

உடனே தனது இரண்டு கைகளாலும் காதைப் பொத்தினான்.

அவனுக்கு வெளி இரைச்சல் எதுவும் காதில் விழவில்லை... அந்நேரத்தில் அவனுக்கு அது அமைதியாக இருந்தது.

அப்படியே யோசனை செய்ய ஆரம்பித்தான்.

காதை அடைப்பதற்கு ஏதாவது ஒரு வசதியை ஏற்படுத்தினால் நல்லது என்று சிந்தனை செய்தான். சிறிது பஞ்சை எடுத்து காதில் வைத்து அடைத்துப் பார்த்தான் அவன் நினைத்தது சரியாக அமைந்தது. அதை வைத்துக்கொண்டு புதிய ஒரு சாதனத்தை வடிவமைத்தான். அதற்குப் பெயர் இயர் மஃப் (Ear muff) என்று கூறினான்.

சென்று கடைகளுக்குக் கொண்டு கொடுத்தான். மக்கள் அதனை விரும்பி வாங்கினார்கள்.

அதிலும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் வெளிச் சத்தம் எதுவும் கேட்காமல் இருப்பதற்கு அதை விரும்பி வாங்கினார்கள்.

அத்துடன் தீயணைப்புத் துறையினருக்கும் இரைச்சலான பகுதிகளில் வேலை செய்பவர்களுக்கும் இது உபயோகமாக இருக்கும் என்று விளம்பரப்படுத்தினான்.

ஓரளவுக்கு வியாபாரம் முன்னேற்றம் அடைந்தது.

அக்காலப்பகுதியில் முதலாம் உலகப்போர் ஆரம்பமானது.

அந்தச் சமயத்தில் போர்வீரர்களுக்கு பீரங்கி சத்தத்தினாலும் துப்பாக்கி வேட்டுகளாலும் எழுப்பப்படும் ஒலி கேட்காமல் இருப்பதற்கு இந்த இயர் மஃப் வழங்கப்பட்டு அணியப்பட வேண்டுமென அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்தார்கள்.

அதனால் போர் வீரர்களுக்கு இயர் மஃப் தயாரித்து வழங்குவதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றது.

போர் வீரர்களுக்கு வசதியாகத் தலைக்கவசத்தினுள் இயர் மஃப்பையும் வடிவமைத்து வழங்கினான்.

அது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

இதன் விளைவாக அவன் வெகுவிரைவிலேயே கோடீஸ்வரன் ஆனான்.

அவர் யார் தெரியுமா? அவர் தான் செஸ்டர் கிரீன் வுட் (Chester Green wood)

இவர் முன்னேற்றம் அடைந்ததற்கான காரணம் என்ன?

சரியான சூழ்நிலையிலே அவனுக்குக் கிடைத்த அறிவுரையாகும். அதனை அவன் சரியான முறையில் பயன்படுத்தியுள்ளார்.

அதனால் வாழ்க்கையில் முன்னேற கடின உழைப்புத்தான் மிகவும் முக்கியம். சில நேரங்களில் சூழ்நிலைக்குத் தகுந்த மாதிரி திடீரென எடுக்கிற முடிவுகள் தான் வாழ்க்கையை முன்னேற்றப்பாதைக்குக் கொண்டு செல்லும் என்று நெப்போலியன் ஹில் கூறியுள்ளார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# அகில இலங்கை இந்து மாமன்றத்தால் பாடசாலை மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நினைவு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் கட்டுரைப் போட்டிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இதில் கீழ்ப்பிரிவில் தரம் 5 முதல் 8 வரையான மாணவர்களும் மத்திய பிரிவில் தரம் 8 முதல் 11 வரையான மாணவர்களும் மேற்பிரிவில் தரம் 12 முதல் 13 வரையான மாணவர்களும் பங்குபற்றமுடியும்.

அத்தோடு கீழ்ப்பிரிவு மாணவர்கள் **நல்லைநகர் நாவலர்** எனும் தலைப்பில் 150 சொற்களுக்குக் குறையாமலும், மத்தியபிரிவு மாணவர்கள் **சைவமும் நாவலரும்** எனும் தலைப்பில் 250 சொற்களுக்குக் குறையாமலும், மேற்பிரிவினர் **நாவலரின் தமிழ் இலக்கணப்பணி** எனும் தலைப்பில் 350 சொற்களுக்கு குறையாமலும் கட்டுரைகளை எழுதி அனுப்ப வேண்டும்.

போட்டியாளர்கள் தமது சொந்த ஆக்கத்தை மட்டுமே அனுப்புதல் வேண்டும். கட்டுரைகள் பாடசாலை அதிபரின் அலுவலக முத்திரை பதித்து அத்தாட்சிப் படுத்தப்படுவதுடன் ஆக்கங்கள் ஏற்கனவே பிரசுரமாகாதவையாகவும் பரிசு பெறாதவையாகவும் இருக்கவேண்டும்.

ஆக்கங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மூலையில் கட்டுரையின் தலைப்பினைக் குறிப்பிடல் வேண்டும். கட்டுரைகள் ஏ4 தாளில் எழுதி அனுப்புதல் வேண்டும்.

இதில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

அத்தோடு மூன்று பிரிவிலும் முதற்பரிசாக மூவாயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக இரண்டாயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

கட்டுரைகள் எதிர்வரும் ஒக்டோபர் 30 ஆம் திகதிக்கு முன்னதாக பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம், இல 91/5 சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு-2 எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# சேவை நேரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண பஸ் நிலைய விரிவாக்கற்கிளை இன்று தொடக்கம் வாடிக்கையாளரின் நன்மை கருதி தனது சேவை நேரம் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை வாடிக்கையாளர் சேவைக்காக திறந்திருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-12)

# உயர்கல்வி கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களுக்கு புதிய கல்வி வாய்ப்புக்களை வழங் கும் மலேசிய உயர்கல்விக்கண்காட்சி நாளை செவ்வாய்க்கி ழமை காலை 8.30 மணிக்கு யாழ்.ஞானம்ஸ் உல்லாச விடுதியில் நடைபெறவுள்ளது.

இதில் ஒரு அங்கமாக வெளிநாட்டுக் கல்வியில் நாட்டம் கொண்ட மாணவர்களுக்கு, பரந்து கிடக்கும் உயர்கல்வி வாய்ப்புக்கள் தொடர்பான சிறந்ததொரு அறிமுகத்தைத் கொடுக்கும் வகையில் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா, அமெரிக்கா, கனடா பல்கலைக்கழக பட்டப்படிப்புக்களை வழங்கும் 10 மலேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் இக்கண்காட்சியில் பங்கேற்கவுள்ளன. (4-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 105 | 130 | 100 |
| பச்சைமிளகாய் | 90 | 80 | 100 |
| தக்காளி | 35 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 50 |
| கோவா | 30 | 60 | 50 |
| கரட் | 50 | 60 | 80 |
| பூசணி | 25 | 30 | 50 |
| புடோல் | 30 | 40 | 50 |
| வாழைக்காய் | 30-40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 60 |
| பாகற்காய் | 60 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 130 | 100 |
| பயற்றங்காய் | 40 | 80 | 70 |
| லீக்ஸ் | 50 | 60 | 40 |
| பீற்றூட் | 15 | 20 | 20 |
| கறிமிளகாய் | 45 | 40 | 40 |
| முருங்கைக்காய் | 30 | 80 | 90 |
| போஞ்சி | - | 110 | 100 |
| கத்தரிதம்புள்ள | - | 20 | 20 |
| கீரை - 1 பிடி | 6-8 | 20 | 15 |
| தேசிக்காய் | 200 | 180 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

19.09.2011

(புரட்டாதி 2, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு

சப்தமி பின்னிரவு 2.45 மணிவரை

ரோகிணி முன்னிரவு 9.23 மணிவரை

இராகுகாலம் 7.33-9.03 மணிவரை

சுபநேரம் 12.03-1.33 மணிவரை

**மேடம்** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், அடிப்படைவசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள நினைப்பீர்கள், மனக்குழப்பம் அகல நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**இடபம்** குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், உடல் நலம் சீராகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், கற்பனைகள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** பயணத்தால் பலன்கிடைக்கும், நண்பர்கள் தொடர்பான சில தேவைகளுக்காக அலைய நேரிடலாம், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், சயனசுகக் குறைவுண்டு.

**கடகம்** வருமானம் பெருகி வளம் காணும் நாள், ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணிபுரியும் நாள், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம்.

**சிங்கம்** தொட்ட காரியம் துளிர்விடும் நாள், புதிய தொழில் தொடங்க போட்ட திட்டங்கள் வெற்றி பெறும், வருமானம் அதிகரிக்கும், தூர தேசத் செய்திகளால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிட்டும் நாள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், வியாபார விருத்தியுண்டு, தந்தைவழியில் தனவரவுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** வரவும் செலவும் சமனாகும் நாள், பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படலாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறுதடைதாமதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** அஞ்சல் வழியில் அனுகூலச் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரியோர் ஆதரவு பெருகும் நாள்.

**தனுசு** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், இனிமையான அனுபவங்கள் ஏற்படும், மூத்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முனைவீர்கள், கனவுகள் நனவாகலாம், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**கும்பம்** உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறும், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், சுபசெய்திகள் வந்து சேரும் நாள்.

**மீனம்** வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும் நாள், பணப்புழக்கம் சரளமாக இருந்தாலும் திடீர் விரயங்களும் உருவாகும், உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்ட முன்வருவர்.

வளவன்

# வலி.கிழக்கு பிரதேச சபையால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் விசேட சபை அமர்வு கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் 2012 இல் சபையினுடைய நிதி குறித்தொதுக்கப்பட்ட மாகாண விசேட நன்கொடை, பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை, என்றிப் திட்டம், நெல்சிப் திட்டம் என்பவற்றினூடாக எதிர்காலத்தில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி வேலைகள் தொடர்பிலான முன்மொழிவுகள் தவிசாளரினாலும் உறுப்பினர்களினாலும் முன்வைக்கப்பட்டு சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதற்கமைய 2012 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம்,

சபையின் உப அலுவலகங்கள், நூல் நிலையங்கள், ஆயுர்வேத வைத்தியசாலைகளைத் திருத்தஞ்செய்தல்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் எல்லைக்குள் பொதுவான இடத்தில் கொல்களம் அமைத்தல்.

புதிதாக அலுவலகங்களுக்குத் தேவையான தளபாடங்களினை கொள்வனவு செய்தல்.

டெங்கு நோயினைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்டத்தினை பொதுமக்கள், நலன் விரும்பிகளின் உதவியுடன் முழு அளவில் மேற்கொள்ளல்.

நீர்வேலி தரவை நிலத்தில் கழிவுப் பொருட்களை தரம் பிரித்து மீள் பயன்பாட்டிற்கான பொருட்களை வேறு பிரதேச சபைகளுக்கு விற்பதோடு பயன்பாடற்ற பொருட்களை சுற்றுச் சூழல் மாசடையாவண்ணம் அழித்தல்.

பொதுச் சந்தைகளைத் திருத்தஞ் செய்தலும் சந்தைகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

புத்தூர் ஆயுர்வேத வைத்தியசாலைக்கான மருத்துவ மூலிகைத் தோட்டம் அமைத்தல்.

பால் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து பாலினைக் கொள்வனவு செய்து பால் பைக்கற்றுக்களை வலி.கிழக்குப் பிரதேசத்தில் விநியோகித்து அதன் மூலம் வருமானத்தினை ஈட்டுதல்.

பொது மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தக்கூடிய வகையில் மரநடுகைத் திட்டத்தினை முன்னெடுத்தல்.

அத்துடன் குறித்தொதுக்கப்பட்ட மாகாண விசேட நன்கொடை நிதி மூலம் உள்ளூர் வீதிகளினை அபிவிருத்தி செய்தல், சமூக அபிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல் போன்ற பல திட்டங்கள் சபையில் முன்னெடுக்கப்பட்டு சபையினரால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு செயல்வடிவம் பெறவிருக்கின்றன. (ஸ்ரீ-12)

## யெகோவாவின் சாட்சிகளின் மாவட்ட மாநாடு

(யாழ்ப்பாணம்)

கடவுளுடைய அரசாங்கம் வருக என்ற பெயர் கொண்ட யெகோவாவின் சாட்சிகளின் மாநாடு எதிர்வரும் 23, 24,25 ஆம் திகதிகளில் காலை 9.20 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

அத்துடன் மூன்று நாட்களிலும் மூன்று நாடகங்கள் நடத்தப்படவுள்ளதுடன் பேச்சுக்கள், போட்டிகள், நடிப்புகள் என்பன இடம் பெறும். (ஸ்ரீ-2)




# பாடசாலைக்கு வரும் மாணவர்களின் வரவு நூறுவீதம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(நவாலி)

பாடசாலையின் அதிபர் மற்றும் வகுப்பாசிரியர்கள் பாடசாலைக்கு வரும் மாணவர்களின் வருகையை நூறு வீதம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் ஆசிரியர் வள நிலையத்தில் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற கட்டாயக் கல்விக்கான கட்டளையை அமுல்படுத்தி வலுப்படுத்தல் தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்டு கட்டாயக் கல்வியின் முக்கியத்துவம் எனும் தலைப்பில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகலுக்கு வரவொழுங்கின்மையே முக்கிய காரணமாகவுள்ளது.

எமது பிரதேசங்களில் பெற்றோரே பிள்ளைகளை தமது சுயதேவைக்காக பாடசாலைக்கு செல்லவிடாது தடுக்கின்றனர்.

இதனால் பெற்றோருக்கு பாடசாலைக் கல்வியின் அவசியம் பற்றி விழிப்புணர்வூட்டுவது அவசியமாகவுள்ளது.

எல்லாப் பெற்றோர்களும் தமது பிள்ளை படித்து நல்ல ஒரு உயர் பதவியை வகிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும்.ஆனால் நாட்டின் தற்கால சூழ்நிலை, அறியாமை, வறுமை இன்னொரன்ன காரணிகள் கல்விக்குத் தடையாக அமைகின்றன.

பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வியில் அதிக அக்கறை எடுத்து கற்பிக்க வேண்டும்.

ஒரு மாணவரின் குறைபாடு கல்விநிலை பற்றி பெற்றோரை அழைத்துக் கலந்துரையாட வேண்டும்.

அப்போது தான் ஒரு மீடிறன் கூடிய மாணவனை உருவாக்கிய பெருமை பாடசாலைகளைச் சென்றடையும்.

சில பிரதேச மாணவர்கள் குறிப்பாக கல்விளான், உயரப்புலம் (பண்டத்தரிப்பு ) சேர்ந்தவர்கள் பாடசாலைக் கல்வியை மட்டும் நம்பியிருக்கின்றனர். இவர்களை விழிப்படுத்த வேண்டிய பொறுப்பு பாடசாலைக்கே உண்டு.

இடைவிலகிய மாணவர் மீண்டும் பாடசாலையில் இணைவதற்கு வரும் போது அப்பிள்ளை பாடங்களில் கொண்டுள்ள அடைவு மட்டத்தை கருத்தில் கொண்டு அவர்களை வகுப்பேற்றி விடலாம் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-4-26)

# மக்களுக்கு சட்ட உதவிகளை பெற்றுக் கொடுப்பதில் கிராமசேவகர்களுக்கே முக்கிய பங்குள்ளது

## பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி தெரிவிப்பு

(கரவெட்டி)



மக்களுக்கு சட்ட உதவிகளை பெற்றுக் கொடுப்பதிலும் சட்ட ஆலோசனைகளை வழங்குவதிலும் முக்கிய பங்கு கிராம சேவையாளரையே சாருமென பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரம் தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் 67 ஆவது கிளை கடந்த 16 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

சமூகத்தில் அனைத்து மக்களுடன் பழகக்கூடிய சந்தர்ப்பம் கிராம சேவையாளர்களுக்கு உள்ளதனால் வறிய மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சட்ட உதவிகளை பெற்றுக் கொடுப்பதில் முக்கிய பங்கு அவர்களுக்கு உள்ளது.

இச்சட்ட உதவி ஆணைக்குழுவின் மூலம் மாதாந்தம் 8 ஆயிரம் ரூபாவிற்கு குறைந்த வருமானத்தை பெறும் மக்கள் சட்ட சிக்கலுக்குள் சிக்கும் போது அவர்களிடம் பணம் இல்லாத சமயம் அவர்கள் சட்ட உதவி ஆணைக்குழுவிடம் உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

மக்கள் கிராமசேவையாளரின் அத்தாட்சி உறுதிப்பத்திரத்தின் மூலம் சட்ட உதவி ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து சட்டத்தரணியூடாக தமது வழக்குகளை வாதிட முடியுமெனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம உயர் நீதிமன்ற நீதியரசர் நிஸங்க உடலகம மற்றும் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா மற்றும் முக்கிய அரச பிரமுகர்கள், சட்டத்தரணிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-12-24)

# இனந்தெரியாதோரின் தாக்குதலில் இளைஞர் ஒருவர் படுகாயம்

(கரவெட்டி)


இனந்தெரியாதோர் மறைந்திருந்து தாக்கியதில் இளைஞர் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இச்சம்பவம் பளைப் பகுதியிலுள்ள துன்னாலை வேம்படிப்பகுதியில் கடந்த 14 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மேற்படி பகுதியைச் சேர்ந்த ஜோசப் இரத்தினம் முகிந்தன் (வயது -22) என்ற இளைஞன் தொழில் புரிந்து விட்டு வீடு நோக்கி சென்று கொண்டிருக்கையில் இனந்தெரியாதோரினால் தாக்கப்பட்டு தலையில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2-12-24)







ஆசான் ஆர்.எஸ்.நடராசா எழுதிய சேர் பொன் இராமநாதனின் கல்விச் சிந்தனையும் கல்விப் பணியும் என்னும் ஆய்வு நூல் அறிமுக விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இந்து மாமன்ற அரங்கில் நடைபெற்றது. இதில் முன்னாள் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி, பண்டிதர், புலவர் செ.திருநாவுக்கரசு மங்கள விளக்கேற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையிலிருந்து 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 178 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ள

**செல்வி ரவீந்திரராஜா யனுஸா**

அவர்களை மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:-
அப்பா, அம்மா,
அப்பம்மா, மாமாமார்,
மாமிமார், சித்தப்பாமார்,
சித்திமார், பெரியப்பா,
பெரியம்மா.

(6175)


# ஆசிரிய உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர்களாக பணியாற்றிவரும் தமக்கு இதுவரையிலும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனவும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஊடாகவும் தம்மை உள்வாங்க வேண்டும் என ஆசிரிய உதவியாளர் அமைச்சரைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுதவிர தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றி வந்த தமக்கு 2009 ஆம் ஆண்டு அரசினால் ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்டு மாதாந்தக் கொடுப்பனவாக 3 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் ஆசிரிய உதவியாளர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வதற்கு கல்விஅமைச்சர் பந்துல குணவர்த்தன நாளை செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ள நிலையில் அப்போது இது தொடர்பாக அவரிடம் விரிவாக எடுத்துரைப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதுதவிர பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மீளவும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இதன்மூலம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஊடாகவும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஊடாகவும் டிப்ளோமா பயிற்சி நெறியை வழங்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தின் பெறுபேறுகள்

**யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை**

து.வைஸ்ணவி-186, ந.ஹரிகிருஷ்ணா-179, இ.இந்துஜன்-154, க.ஜனுஷன்-161, ஜ.கிஷோரன்-167, ஜெ.மாதவன்-182, சி.சாருஜன்-166, ம.ஆரபி-163, அ.பானுஜா-165 , ஜெ.கஜவதனா-167, ர.கதுர்ஷிகா-154, வ.கீர்த்தனா-159, சி.கீர்த்திகா-157, இ.மிதுசுஜி-176, சி.நதீபா-171, க.ஜஸ்மினி-165, ப.கேஷாயினி-171, இ.கஜனி-174, ரூ.வக்ஷாயினி-167, சு.மாதங்கி-169,

மோ.மதுர்ஷனா-160, சி.பிரியதர்ஷினி-154, கு.சங்கவி-158, கா.சினேகா-164, இ.தர்மினி-167, இ.நிதுர்ஷன்-156, கே.ரகுராம்-162, ரு.சாரங்கன்-171, சி.சிவகோபன்-165, வி.விபுலன் -164, ப.ஊர்மிலன்-163, செ.சுயானுஜன்-172, த.தேனுஜா-152, பு.சோபிஜா-175, வி.தாரகா-158, சௌ.டெனீஷன்-154, லோ.கஜீபன்-176, பா.கஜீபன்-158, சி.கீர்த்திகன்-161, ச.கிருஷாந்-156, பா.கோகிலகிருஷ்ணன்-151, ப.லிவியபிரசாத்-153, த.சுந்தரேஸ்வரி-175

**யாழ்.சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை**

இ.கிருத்தியாயினி-160, பா.கேதுஷா-159, சி.சர்மிலன்-150, வி.சத்தியப்பிரகாஷ்-149, ரா.சஞ்சீவி-148.


# ‘சிவாகம கிரியா பூஷணம்’ பட்டம் வழங்கிக் கௌரவம்

தர்மபுரம் நெத்தலியாறு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகக் கிரியைகளை சிறப்புற நடாத்தியமையை பாராட்டி, ஆலய பிரதம குரு

**சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்**

அவர்களுக்கு ***சிவகாம கிரியா பூஷணம்*** என்னும் பட்டம் 16.09.2011 அன்று குருமார்கள், ஆலய பரிபாலன சபையினர், தர்மபுரம் குரும்பசிட்டி அம்பிகை அடியார்கள் முன்னிலையில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

**ஆலய பரிபாலன சபையினர்,**
**தர்மபுரம் நெத்தலியாறு ஸ்ரீமுத்துமாரி**
**அம்பாள் ஆலயம்.**

(ஜி-4484)



# அந்தியேட்டி அழைப்பு

## செல்வராசா பாசமலர்



கரவெட்டி மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட செல்வராசா பாசமலர் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி இன்று 19.09.2011 நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர் கலந்து கொண்டு நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:-**
**செல்வராசா (கணவர்)**

(ஜி-4483)



- தபால் மூலம் -

# ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

**SEPT. 2011 TO FEBRUARY 2012**

22

***தமிழ் மொழி மூலம்***

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2011



# மரண அறிவித்தல்

## அமரர் கந்தசாமி இராஜரட்ணம்



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் ஆனந்தபுரம் கிழக்கு கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தசாமி இராஜரட்ணம் அவர் 13.09.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இராசகுமாரி (சுமதி) யின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நவரட்ணம்-இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயமாலினி (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற திலகேஸ்வரன், யசோதமாலினி, சதீஸ்வரன் (கனடா), குகனேஸ்வரன், றோகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வரட்ணம் (கனடா), சிவசோதிமலர், கலையமுதன் (டாஸ் கண்ணி வெடிப்பிரிவு) ஆகியோரது அன்புச் சகோததரனும், அருந்தவமலர், இராசலட்சுமி, குமார், கண்ணன், முரளி, பபிதா ஆகியோரின் மைத்துனரும் ஜெயகரன் (கனடா), ரூபகாந்தன், சிந்துஜா, இந்துஜா, கிந்துஜன், துஸ்யந்தன், தனுஷன், மதுஷன், திவியா, டிலோசன் ஆகியோரது அன்புமாமனாரும், பரிதிகனின் அன்பு பெரியப்பாவும், மதுஷன், டலதன், திவியன் ஆகியோரது சித்தப்பாவும், ஐஸ்சன், கவின், காருஷா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 19.09.2011 இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்திற்காக திருநகர் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(சி-4484)

## 19 ஆவது மனித உரிமை பேரவை கூட்டத்தில்

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும் ஐ.நா.அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

### 16 சர்வதேச அரசசார்பற்ற அமைப்புக்கள் கோரிக்கை

2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள 19 ஆவது மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையும் ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் பான் கீ மூனின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையை 16 சர்வதேச அரசசார்பற்ற அமைப்புக்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தலைவராக உள்ள உருகுவேயின் லௌராடிபை லசராவிடம் வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பில் 16 அரச சார்பற்ற அமைப்புகளும் கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பியுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே 23 ஆம் திகதியன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூனும் வெளியிட்ட அறிக்கையில் சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு ஏற்ப வன்முறைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற வசனம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை அரசாங்கம் தமது கடமையை நிறைவேற்ற வேண்டும். இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் தமது நல்லிணக்கக் குழுவின் அறிக்கையை வெளியிடவேண்டும்.

ஏற்கனவே 17 ஆவது மனித உரிமைகள் பேரவை கூட்டத்தின்போது இலங்கை எதிர்வரும் நவம்பர் மாதம் நல்லிணக்கக் குழுவின் அறிக்கை வெளியாகும் என்று தெரிவித்திருந்தது.

இதன் அடிப்படையில் அந்த அறிக்கையும் பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கையும் 19 ஆவது செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் கோரியுள்ளன.

ஆபிரிக்க ஜனநாயக அமைப்பு, சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஆசிய அமைப்பு, ஆசிய சட்டவாக்க நிலையம், கெய்ரோ மனித உரிமைகள் கற்கை மையம், பொதுநலவாய மனித உரிமைகள் அமைப்பு, கிழக்கு மற்றும் ஆபிரிக்க மனித உரிமைகள் பாதுகாப்புத் திட்டம், ஜேர்மன் மனித உரிமைகள் அமைப்பு, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச ஜூரிமார் ஆணைக்குழு, சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு, மனித உரிமைகளுக்கான சர்வதேச சம்மேளனம், இனத்துவேசம் மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிரான சர் வதேச அமைப்பு, மனித உரிமைகளுக்கான சர்வதேச சேவை , சர்வதேச கத்தோலிக்க புத்திஜீவிகள் அமைப்பு மற்றும் சித்திரவதைக்கு எதிரான உலக அமைப்பு என்பனவே இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளன. (ஸ்ரீ-2)

## இராணுவத் தளபதி ஹெயிட்டிக்கு விஜயம்

இராணுவத் தளபதி லெப் ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஹெய்டிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அங்கு அவர் ஐ.நா. சமாதானப் படையினரின் செயற்பாடுகளை பார்வையிடவுள்ளார்.

இதேவேளை ஹெயிட்டிக்கு செல்லும் வழியில் ஐ.நா.வின் இராணுவ ஆலோசகரும் சமாதானப் படை நடவடிக்கைகள் திணைக்களத்திற்கான ஐ.நா. உதவிச் செயலாளருமான லெப். ஜெனரல் பாபாகார் கயேவையும் இராணுவத் தளபதி சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. சமாதானப் படை திணைக்களத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் ஐ.நா.வுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவும் கலந்து கொண்டார். (ஸ்ரீ-2)

# அரச துறைகளில் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க துறைகளில் இடம்பெறும் பல்வேறு ஊழல் மோசடிகள் குறித்து தினமும் சுமார் 25 முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவரான ஜகத் பாலப்பட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் உரிய முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வட்டிக்கு பணம் கொடுத்தல் போன்ற இலஞ்ச ஊழல் சட்டத்திற்கு உட்படாத விடயங்கள் குறித்தும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழு இயங்காத காலத்தில் கிடைக்கப்பெற்ற 3 ஆயிரத்து 700 முறைப்பாடுகள் தொடர்பாக கடந்த மே மாதம் 15 ஆம் திகதி முதல் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றதென ஆணைக்குழுவின் தலைவர் ஜகத் பாலபட்டபெந்தி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்க அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் மோசடிகள் குறித்து இலஞ்ச ஆணைக்குழுவை 1954 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளைச் செய்ய முடியும் என இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# சட்டம் முறையாக அமுல்படுத்தப்படாமையே சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரிக்க காரணம்

### சிறுவர் பாதுகாப்பு சபையின் முன்னாள் தலைவர்கள் தெரிவிப்பு

சட்டம் முறையாக அமுல்படுத்தப்படாதமையே சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளதென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் முன்னாள் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

சட்டம் எழுத்து மூலம் மாத்திரம் வரையறுக்கப்படக் கூடாதென சபையின் முன்னாள் தலைவரும் களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியருமான ஹரேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளின் தாமதமும் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு சாதகமாக மாறியுள்ளது என்று அதிகார சபையின் மற்றுமொரு முன்னாள் தலைவரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜகத் வெல்லவத்த தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களுக்குப் பிணை வழங்காதிருக்கவும் மரண தண்டனை விதிப்பது தொடர்பிலும் யோசனைகளை விரைவில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளதாக சபையின் தற்போதைய தலைவரான சட்டத்தரணி அனோமா திசாநாயக்க அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

எனினும் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் கடுமையான நடவடிக்கைகள் குறித்து சிறுவர் மகளிர் மேம்பாட்டு அமைச்சர் திஸ்ஸகரலியத்த கருத்துத் தெரிவிக்கும் போது இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை விதிப்பதற்குரிய புதிய சட்டங்களைக் கொண்டு வர எண்ணியுள்ளதாகத் தெரிவித்தார். (ஸ்ரீ-2)




ஓமந்தை அஞ்சல் நிலையமானது எந்தவித வசதிகளுமின்றி தற்காலிக கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இவ் அஞ்சல் நிலையம் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் ஏ-9 முதன்மைச்சாலையில் 12 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இது 70 வருடங்களுக்கு முன்பிலிருந்து தபால் பட்டுவாடா தொலைபேசி வசதியுடன் 1997 ஆம் ஆண்டு வரை இயங்கி யுத்த காலத்தில் சேதமடைந்து இடம்பெயர்ந்து 2002 இல் மீண்டும் அரச காணியில் பொது மக்களின் உதவியுடன் 16X12 அளவுடன் பாழடைந்த சிறிய கட்டடம் புனரமைக்கப்பட்டு மின்சார வசதி, தொலைபேசி வசதி, காணி வசதி, கட்டட வசதியின்றி இயங்கி வருகின்றது. தற்போது காணி கிடைத்தும் கட்டட நிதி ஒதுக்கப்பட்டும் இன்றுவரை வேலை எதுவும் நடைபெறவில்லை. இங்கு உபதபால் அதிபர், 04 தபால் சேவகர்கள், 02 அஞ்சல் பொதி விநியோகம் செய்வோர், 02 பதில் தபால் ஊழியர்கள் கடமையாற்றுகின்றார்கள்.

இந்த அஞ்சல் நிலையத்தில் இருந்து சேமமடு உப அஞ்சல், மரை அடித்த குளம், பாலமோட்டை ஆகிய உப அஞ்சல்களுக்கு அஞ்சல் பொதி கொடுக்கப்படுகின்றது. இந்த அஞ்சல் நிலையத்தில் இருந்து தபால் சேவகர்கள் நொச்சிமோட்டை புதிய சின்னக்குளம், பறநாட்டகல், மாணிக்க வளவு, காயான்குளம், கள்ளிக்குளம், நாம்பன்குளம், வேப்பங்குளம், அரச முறிப்பு, பெரியவிளாத்திக்குளம், ஓமந்தை நகரம், மருதோடை, நாவற்குளம், மருதங்குளம், அலைகல்லுபோட்டகுளம், வேலர்சின்னக்குளம், அரசன்குளம், இறம்பைக்குளம், பாக்குசொறிஞ்சான், விளக்குவைத்தகுளம், வேடர்மகிழங்குளம், பன்றிக்கெய்தகுளம், கொந்தக்காரன்குளம், நெய்வேலி, கோழியகுளம், கொம்புவைத்தகுளம், கதிரவேலர் பூவரசங்குளம் ஆகிய கிராமங்களுக்கு தபால் விநியோகம் செய்கிறார்கள்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள உப அஞ்சல் அலுவலகங்களில் மக்களின் சேமிப்பு நிதியை அதிகளவு உள்வாங்கியதும் ஓமந்தை அஞ்சல் அலுவலகம்தான் முதன்மையாகவுள்ளது. மாண்புக்குரிய அமைச்சர் அவர்களே! நிர்வாக ஆற்றல் கொண்டுள்ள அரச அதிபர் அவர்களே! உரிமை வேட்கை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களே! இன்னும் ஏன் தாமதம் எமது ஓமந்தை அஞ்சல் அலுவலகத்தினை நிரந்தர கட்டட வசதியுடன் தொலைபேசி மின்சார வசதியுடன் ஒளிபெற முயற்சிக்கமாட்டீர்களா உங்களை இரு கரம் கூப்பி வேண்டுகின்றோம். எமது வேண்டுதல் உங்கள் இதயத்தில் உட்புகுந்தாலே போதும் வேலை முடிந்து விடும்.

ஓமந்தை பிரதேச மக்கள்.

# துப்பாக்கி வைத்திருந்த சந்தேக நபர் கைது

(கொழும்பு)

துப்பாக்கியொன்றை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் பிலியந்தலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த வான் ஒன்றை சோதனைக்குட்படுத்திய போது துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மடபாத்த பகுதியைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# அளவை- விபத்து தொடர்பில் ஆராய விசேட குழு நியமனம்

### அமைச்சர் குமாரா வெல்கம தெரிவிப்பு

அளவை தொடரூந்து நிலையத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற தொடரூந்து விபத்து காரணமாக 7 கோடியே ஐம்பது இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு மதிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் விபத்து இடம்பெற்ற இடத்தை அமைச்சர் குமார வெல்கம சென்று பார்வையிட்டதாகவும் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே விபத்து ஏற்பட்டதற்கான காரணத்தை கண்டறியும் வகையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விபத்திற்கான காரணியாக யாராவது இருக்கும் பட்சத்தில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். இது தவிர தொடரூந்து கட்டுப்பாட்டு நிலையம் செயற்பட்ட விதம், சமிஞ்ஞை செயற்பாடுகள், சாரதிகளின் தவறுகள் மற்றும் தொடரூந்து நிலைய அதிபர்கள் செயற்பாடு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-2)

# மற்றொரு கோணம்

## எதிரி வெளியே இருந்ததால்தான் மகாத்மாகாந்தியடிகளுக்கு இலட்சக்கணக்கானமக்களைத் திரட்ட முடிந்தது



இன்று நிர்வாகிகள் பலரும் மன அழுத்தத்தால் அவதிபபடுவது ஏன்?.. (இக் கேள்விக்கான பதில் தொடர் கீழே)

....அடிப்படையில் நிர்வாகம் என்பது நமது விதியின் போக்கை நாமே நிர்ணயிப்பது. அதுதான் நிர்வாகம். "நான் ஒரு மேலாளர்" என்று சொல்வீர்களேயானால் நீங்கள் ஒரு குறிப்பிட்ட திசையில் செல்ல விரும்புகிறீர்கள். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை உள்நிலையிலும் வெளி நிலையிலும் இருக்க வேண்டும் என விரும்புகிறீர்கள்



என்றே பொருள். மனித வாழ்வு அழகு பெறுவது சரியான செயல்களை நாம் செய்வதால் அல்ல. இதய பூர்வமாக நாம் செயல் செய்வதால்தான் அழகு பெறுகிறது. நாம் என்ன செய்கிறோம் என்பது ஒரு விடயமே அல்ல. நாம் தரையைத் துடைக்கிறோமோ, தேசத்தை நிர்வகிக்கிறோமோ எந்த செயலாகவும் இருக்கலாம். நாம் செய்யும் செயலை இதய பூர்வமாகச் செய்தால், அந்த செயலைச் செய்வதே, மிக அழகான ஒன்றாக இருக்கும். வாழ்க்கை அழகு பெறுவது, அது கொண்டுள்ள உள்ளடக்கங்களில் அல்ல. அதன் பரிமாணங்களில் உள்ளது.

சமூக வாழ்க்கை சகதியாகி விட்டது. இதில் ஆன்மீக வழியில் எப்படி வாழ்வது?

நம்மால் இந்தச் சகதியைத் தவிர்க்க முடியாது. உலகில் நடக்கும் அனைத்து முட்டாள் தனங்களும் உங்கள் தலையிலும் உள்ளன. ஒரு சிலர் ஒவ்வாமையை வளர்த்துக்கொண்டு இதிலிருந்து தப்பித்துவிட முயற்சிக்கிறார்கள். ஒருபோதும் அவர்களால் அதைச் செய்ய முடியாது. மக்களில் மற்றொரு சிலர், துரதிர்ஷ்டவசமாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள். அவர்களுக்கு அவர்களுடைய தத்துவம் இருக்கிறது. எப்படியும் சகதியுள்ளது. இந்த உலகமே சகதியாய் உள்ளது. நானும் அவற்றோடு சேர்ந்து சகதியாகிறேன் என சகதியோடு சகதியாகி விட்டனர். நாம் சகதி, சேறு எனக் கூறுவதும் ஒரு சிறந்த உரமாகலாம். இந்திய ஆன்மீகத்தில் தாமரை மலர் எப்போதும் ஒரு அடையாளமாக பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. எதற்காகத் தாமரை மலரென்றால், சகதி எங்கே அடர்த்தியாக இருக்கிறதோ, அங்கேதான் தாமரை மலர் நன்றாக வளர்கிறது. அந்த சகதிதான் உங்களால் பொறுத்துக்கொள்ள முடியாத நாற்றத்தைத் தருகிற- அந்த சகதிதான் நறுமணம் மிக்க மலராக தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. இந்த வாய்ப்பு நமது வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் உள்ளது.

நமது வாழ்வின் சூழல் நம்மை நிர்ணயிக்கிறது என்றால், நாம் நம்மை திறமையாளர் என்று கூறிக்கொள்ள முடியாது. நமது வாழ்வின் சூழ்நிலையை நாம் உருவாக்க முடிந்தால்தான் நாம் நம்மை மேலாளர் எனக் கூறமுடியும். திறமையாக இருப்பது என்பது இந்தச் சூழ்நிலைக்குத் தேவையானவற்றை நிகழச் செய்வது தான்.

எதிரிகளை எப்படி கையாளலாம்?

ஹிட்லரிடம் இருந்தது வெறும் இருபது பேர் அல்ல. பத்தாயிரம் பேரோ அல்லது இருபதாயிரம் பேரோ அல்லது இலட்சம்பேரோ. இதிலிருக்கும் எளிய சூட்சுமத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன். நான் இங்கே அமர்ந்து கொண்டு வெளியே ஒரு எதிரியை உருவாக்கி, நீங்கள் படுகின்ற அனைத்து துன்பங்களுக்கும் பக்கத்துக் கட்டிடத்தில் இருக்கும் மனிதர்கள்தான் காரணம் என்று கூறினால் உடனே

ஆன்மீகம் 45

நீங்கள் அனை வரும் எழுந்து நின்று "நாம் இறந்தாலும் பரவாயில்லை, வாருங்கள் செல்வோம் அவர்களை சாகடிப்போம்" என்று சொல்வீர்கள். வெளியே எதிரியை உருவாக்கும் பட்சத்தில் மக்களை அதனை நோக்கி நகர்த்துவது எப்போதும் எளிதானது.

எதிரி வெளியே இருந்ததாலேயே மகாத்மா காந்தியடிகள் இலட்சக் கணக் கான மக்களைத் திரட்ட முடிந்தது. வெளிச்சூழலில் எதிரி இல்லாத பட்சத்தில் எதிரி அவர்களுக்குள்ளே தான் இருக்கிறார். அந்த எதிரியை அவர்கள்தான் கையாள வேண்டும் என்ற தேவையைப்புரிந்து மக்களைப் பெறுவதென்பதும், அது போன்ற மக்களை உருவாக்குவதென்பதும் வேறுவிதமான விடயம்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# சத்திய வேட்கைத் திருவரி

தமிழ் மறையாயினும்
பொது மறை யென்றே
தரணி போற்றிடும் திருக்
குறள் –அதன்
அமிழ் தினுமினிய அற
நெறிக் கருத்தை
அகிலமே ஏற்றிடும் திருக்
குறள்!

ஈரடி எழுசீர்– இக்குறள்
வெண்பா
எத்துணை சின்னஞ் சிறி
யது– அப்
பாவடி உலகப்பரப் பினுக்
கியம்பிடும்
பாடமோ பென்னம் பெரி
யது!

முதலடி தொடங்கி ஈற்றடி
முடிய
விரிந்துள பொருளோ
மாக்கடல்–முப்
பால்குடி என்றே பருகிடும்
படி–அப்
பால்தரும் அதுவோ பாக்
கடல்!

அறத்துப் பாலென ஒரு
பால் அடுத்து
பொருட்பா லென்றொரு
மற்றொருபால்–நீ
சுவைத்துப் பாரென காமத்
துப்பால்
சுவைதரும் முப்பால் குடித்
துப்பார்!
முப்பால்பொங்கிப்பொருட்
சுவை வழியும்
முதன் நூல் இந்நூல் முப்
பாநூல் –இனி

இப்பால் போலும் இன்ன
ருஞ் சுவையை
எப்பா நூல்தரும் எப்பா
நூல்?

அறத்துப்பாலுடன்அடுத்திரு
பாலையும்
அருந்திடஅறிவுப்பசிபோம்!
–மறு
புறத்தில் அந்தப் பொய்யா
மொழித்தேன்
புசித்திடப் புசித்திட ருசி
யாம்!

சாதி மதம்மொழி இனம்
நாடென்னும்
சகல பேதமும் விட்டு –
பெரும்
நீதிநூலென நிலைத்து
விட்டதே
நிலமிசை மாந்தரைத்
தொட்டு!

அறமா? பொருளா?
அன்பா? காதலா?

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கவிதை"

அனைத்தும் அதற்குள்
அடக்கம்– அதன்
திறனா யுங்கால் திக்கு
எட்டுக்குந்
திவ்விய அறநெறி கிடைக்
கும்
முப்பா நூலினுள் நூற்று
முப்பத்து
மூன்றதிகாரமும் முத்து–
அது
இப் பார் மீது நெறிபிற
ழாமையை
இயம்பும் இயற்றமிழ்ச்
சொத்து!

பல்லுக்குறுதி படைக்க வல்
லது
ஆலும் வேலும் அது போல்
–நம்
சொல்லுக்குறுதி படைக்க
வல்லது
நாலும் இரண்டும் இது
போல்

வாழும் வரைக்கும்
வாழ்வுக் குறுதி
வழங்க வல்லது வாம
னம்!– தகை
சாலுங் குறள் நெறிப்
போதனை மணக்கும்
தமிழ்மறை பூத்துள பூவனம்!

மனையறம் மங்கலம்
மக்கட் பேறு
மனுவாழ் வினிற் சுகஞ்
சிறந்திட–தினம்
கணவனின் அன்பும் மனை
வியின் காதலும்
கனிச்சுவை யாய்க் கலந்
தினித்திட

தனக்குவமை இதுவென
வுரைக்க
இல்லாதவன் தாழ்
பணிந்திட – அரண்
மனைக்குள் வாழினும்
மட்குடிலாயினும்
மனிதன் பக்குவம்
கனிந்திட

அன்புக்கில்லை அடைக்
கும் தாளென
அன்பைப் பாய்ச்சி
அணைத்திட– வெறும்
என்பும் தோலும் போர்த்
திய வாழ்வின்
எதார்த்தம் யாதென்
றுணர்ந்திட

சாற்றுங் குறட்பா சகம்
மீதெழுந்த
சத்திய வேட்கைத் திரு
வரி–அது
போற்றத் தகுந்த நீதி
நெறிதனைப்
புகட்டத் தகுந்த இருவரி!

தெய்வப்புலவர் திருவள்
ளுவனார்
செய் தளித்திட்ட பொக்கி
ஷம்! –அது

கிண்ணியா ஏ.எம்.எம்.அலி

பொய்யா மொழியெனப்
புகழப்பட்டிடும்
பொதுமறை! நன்னெறிப்
பெட்டகம்!

வள்ளுவர் போலும் வல்
லவர் ஆரோ?
தெள்ளிய குறளின் போதம்
– அவர்
உளத்தாற் பொய்யா
தொழுகிய வண்ணம்
உலகுக் களித்த வேதம்!

# புரட்டாதி மாத இராசி பலன்கள்




(சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)

**வக்ர வியாழன் வளர்ச்சிக்கு வித்திடுவார்!**

***கலகலப்பாக பேசி காரியங்களை சாதித்துக் கொள்வதில் வல்லவர்களாக விளங்கும் துலாம் இராசி நேயர்களே!***

உங்களிடம் ஒரு வேலையைக் கொடுத்தால் அதை உடனடியாக செய்து முடிப்பீர்கள். மற்றவர்கள் பிரதிபலனை எதிர்பார்ப்பார்கள். ஆனால் நீங்களோ பிரதிபலனை எதிர்பார்க்காமல் வருவது வரட்டும் என்று செயற்படுவீர்கள்.

பரம்பரை சொத்து அதிகமாக இருந்தாலும் அதை அனுபவிக்க இயலுமா? என்பது சந்தேகம்தான். உடல் ஆரோக்கியத்தை பேணிப் பாதுகாப்பதில் உங்களுக்கு இணையாருமில்லை என்றே சொல்லலாம். கலைத்துறையில் ஈடுபாடு மிக்கவர்களாகவும் விளங்குவீர்கள்.

உங்களுக்கு இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சுக்ரன் விரய ஸ்தானத்தில் நீச்சம் பெறுகின்றார். எனவே ஆரோக்கியம் மற்றும் தொழில் துறைகளில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

எதையும் ஒரு முறைக்கு இரு முறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் பொழுதும் யோசித்து கையெழுத்திடுவது தான் நல்லது.

பொருளாதாரத்தை பொறுத்த வரை ஒரு தொகை செலவழித்த பின்னரே அடுத்த தொகை வந்து சேரும். அஷ்டமத்தில் கேது சஞ்சரிப்பதால் அடிக்கடி தடைகளும் தாமதங்களும் தவிர்க்க முடியாததாக அமையும்.

எனவே ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகம் வைத்துக் கொண்டால் இல்லற வாழ்க்கை இனிதாக அமையும்.

ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் எதையும் யோசித்து செயற்படுத்தினால் விரயங்களில் இருந்து தப்பிக்க இயலும்.

மாதத்தின் தொடக்க நாளில் விரயாதிபதி புதன் உச்சம் பெறுகிறார்கள். அத்தோடு உங்கள் இராசிநாதனும் இணைவதால் குடும்பச் சுமை கூடும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலுமா? என்பது சந்தேகம் தான். நீண்ட நாளைய முயற்சிகள் முடிவடையாமல் மன வருத்தத்தை உருவாக்கும்.

உத்தியோகம் தொழிலில் உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. தெசாபுத்திக்கேற்ற வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

புதனும் சுக்ரனும் இம்மாதம் ஒன்று கூடுகிறார்கள். ஜென்மத்தில் ஒக்டோபர் 5 ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். அதோடு 9, 12 க்கு அதிபதியான புதனும் முதல் நாளே வந்திணைகிறார்.

எனவே முன்பு இருந்ததைக் காட்டிலும் இப்போது நிலைமை கொஞ்சம் சீராகும். என்ன இருந்தாலும் குடும்ப பெரியவர்களை கலந்தாலோசித்துச் செய்தால்தான் சிக்கல்களில் இருந்து விடுபட இயலும். வீடு மாற்றம், இடமாற்றம் ஒரு சிலருக்கு உருவாகலாம்.

இம்மாதம் 2 இல் இராகு, எட்டில் கேது இருப்பதால் சர்ப்ப கிரக வழிபாட்டை மேற்கொள்வதோடு விநாயகர் மற்றும் துர்க்கை வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். வெற்றி வாய்ப்புக்கள் வீடு தேடி வந்து சேரும்.

இம்மாதம் குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்து செல்ல வேண்டிய மாதமாக அமையப் போகின்றது.

எதையும் முன்யோசனையுடன் செய்வது நல்லது. பக்கத்து வீட்டாரின் பகையை வளர விடாமல் பார்த்துக் கொள்ளவும்.

குழந்தைகளின் வழியில் அதிக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும். வியாழன் வக்ர நிலையில்இருந்து பார்ப்பதால் கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும்.

உங்கள் பெயரில் வாங்கிய சொத்துக்களை குடும்பச் செலவின் காரணமாக விற்கும் சூழ்நிலை உருவாகிறதே என்று கவலைப் படுவீர்கள். இராகு வழிபாடு நன்மையை வழங்கும்.




(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை )

**கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்!**

***வாழ்க்கையில் உயர்ந்து கொண்டே செல்ல வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்ட விருச்சிக இராசி நேயர்களே!***

உதவி செய்வதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை. நன்றி சொல்வதிலும் வல்லவர்களாக விளங்குவீர்கள். நாட்டுப் பற்று உள்ளவர்களோடும் வீட்டுப்பற்றுடையவர்களோடும் உங்களுக்கு பழக்கம் இருக்கும்.

எந்தக் காரியத்தை உங்களிடம் கொடுத்தாலும் அதை பொறுப்புணர்ச்சியோடு செய்து முடிப்பீர்கள். பல சாதனைகளை செய்ய வேண்டுமென்று ஆசைப்படுவீர்கள்.

உங்களுக்கு இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஜென்ம இராகுவின் பலத்தால் செல்வ நிலை உயரும் என்றே சொல்ல வேண்டும். அது மட்டுமல்ல ஒன்பதுக்கு அதிபதி சந்திரன் உச்சம் பெற்றும் இலாபாதிபதி புதன் மாதத் தொடக்க நாளிலேயே இலாப ஸ்தானத்திற்கு வருவதும் மிகமிக யோகத்தைக் கொடுக்கும்.

இராசிநாதன் செவ்வாய் நீச்சம் பெறுகிறாரே என்று நீங்கள் நினைக்க வேண்டாம். நீச்சன் நின்ற இராசிநாதன் ஆட்சி உச்சம் பெற்றால் நீச்ச பங்க இராஜயோகம் என்று சொல்வது வழக்கம். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது நீச்சன் நின்ற இராசிநாதனாக விளங்கும் சந்திரன் உங்கள் இராசிக்கு ஏழாமிடத்தில் உச்சம் பெற்று மாதத்தின் தொடக்க நாள் அமைவதால் அந்த யோகமும் உங்களுக்கு கை கொடுக்கும்.

காரிய வெற்றி, கலைத்துறை சார்ந்தவர்களின் அறிமுகம், புதிய ஒப்பந்தங்கள், பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள திட்டமிடுதல், அனைத்தும் கை கூடும். இராகு-கேதுவிற்கு உரிய சர்ப்ப சாந்தியையும் திருமால், ஸ்ரீதேவி, அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். ஆனந்த வாழ்க்கை மலரும்.

மாதத் தொடக்க நாளிலேயே இலாபாதிபதி புதன் இலாப ஸ்தானத்தில் உச்சம் பெறுகின்றார். எனவே பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதற்கு விரும்புவீர்கள். வாகன பராமரிப்புச் செலவை முன்னிட்டு புதிய வாகனமே வாங்கலாம் என்று முடிவெடுப்பீர்கள். வீடு கட்டும் முயற்சியிலும் சிந்தனையை செலுத்துவீர்கள்.

புதனும் சுக்ரனும் ஒன்றாக இணைந்து செயற்படும் நேரமாக ஒக்டோபர் 5 ஆம் திகதி அமையப் போகிறது. நான்காம் திகதி புதன் பெயர்ச்சி, ஐந்தாம் திகதி சுக்ரன் பெயர்ச்சி. இந்த இரண்டும் ஒன்றாக இணையும் பொழுது மறைந்த புதனாலும் மறைந்த சுக்ரனாலும் நிறைந்த தனலாபம் கிடைக்கப்போகிறது.

கல்யாணக் கனவுகள் நனவாகும். வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்து சேரும். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். தெய்வீக சிந்தனை மேலோங்கும்.


நவராத்திரி விழாவைக் கொண்டாடி, துர்க்கை, சரஸ்வதி, இலக்குமியை வழிபட்டு தொடர்ச்சியாக நன்மைகளை வரவழைத்துக் கொள்ளுங்கள். வார வழிபாடாக விநாயகர் மற்றும் பெருமான் வழிபாடோடு பிரதோஷத்தன்று நந்தியையும் வழிபட்டு வாருங்கள்.

இம்மாதம் எடுத்த காரியங்கள் அனைத்தும் எளிதில் வெற்றி பெறும் மாதமாக அமையப்போகின்றது. பொதுவாக கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். கூட இருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும்.

ஒக்டோபர் 5 ஆம் திகதிக்கு மேல் பிள்ளைகள் வழியில் சுபச் செய்திகள் வந்து சேரும். தாய்வழி தனஇலாபம் தானாகவே கிடைக்கும். உடல் நலத்தில் மட்டும் சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். உங்கள் கனவுகள் நனவாக கணபதியையும் பெருமைகள் வந்து சேர பெருமானையும் வழிபட்டு வாருங்கள்.

(தொடரும்)

## சிவல்புரி சிங்காரம்



தும்பளை யோகாசாந்தி நிலையத்தினரிடம் யோகாப்பயிற்சி பெற்ற வைத்திய கலாநிதி சொணோகா அந்நிலையத்திற்கு அன்பளிப்பாக ஒரு தொகைப் பணத்தை வழங்கியுள்ளார். இப்பணத்தின் மூலம் யோகாசாந்தி நிலையத்தினர் பருத்தித்துறை வராத்துப்பளை பகுதியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வசிக்கும் குடும்பம் ஒன்றுக்கு தையல் இயந்திரத்தினை நகரபிதா சபாரவீந்திரன் அன்பளிப்புச் செய்வதையும் அருகில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர் தி.சந்திரசேகரன், வைத்தியகலாநிதி டேவிட் ஹெய்ஸ் பொக் மற்றும் யோகசாந்தி நிலைய ஆசிரியர் தே.தேவராஜேந்திரன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# இங்கிலாந்தில் யுத்தக்குற்றம் தொடர்பான சட்டத்தில் தளர்வு

இங்கிலாந்துக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டவர்களை யுத்தக் குற்றம் தொடர்பாக தடுத்து வைக்கும் சட்டத்தில் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கிலாந்தின் பழைய சட்ட விதி முறைப்படி அந்நாட்டிற்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு அரசியல்வாதிகளுக்கு எதிராக யுத்தக் குற்றம் தொடர்பாக பொதுமகன் எவரும் வழக்குத் தாக்கல் செய்து ஏதாவது நீதிமன்றத்தினூடாக கைது உத்தரவைக்கோர முடியும்.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் மூலம் இது மாற்றப்பட்டுள்ளது. புதிய சட்ட விதிகளின் படி உலகளாவிய அதிகார வரம்புகளின் மீதான வழக்குகளின் போது பிடிவிறாந்து பிறப்பிப்பதற்கு முன் பொது வழக்குகள் இயக்குநரின் ஒப்புதலை பெறுதல் வேண்டும்.

கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் இந்த சட்டத்தில் திருத்தத்தை வேண்டியிருந்தது. பாலஸ்தீனம் காசா மீதான 2008, 2009 போர்க்குற்றங்கள் தொடர்பில் இஸ்ரேலிய முன்னாள் வெளியுறவு அமைச்சர் இங்கிலாந்தில் வைத்து கைது செய்யப்படக்கூடிய வாய்ப்புக்களிருந்தன.

இதன் காரணமாக அவர் அந்நாட்டுக்கான தனது விஜயத்தை இரத்துச் செய்திருந்தார். தற்போதைய புதிய சட்டத்தை அவர் வரவேற்றுள்ளார். படையதிகாரிகளுக்கும் வீரர்களுக்கும் எதிராக இங்கிலாந்து நாட்டின் சட்டம் பயன்படுத்தப்படுவதை இது தடுத்து நிறுத்துமெனவும் அவர் கூறியுள்ளார்.

பழைய சட்டத்தின் கீழ் மனிதவுரிமை ஆர்வலர்கள், முன்னாள் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹென்றி கிசிங்கர்,சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட தலைவர் பேர்ஷிலை மற்றும் லிவ்னி ஆகியோருக்கெதிராக யுத்தக் குற்றம் தொடர்பாக பிடிவிறாந்தைக் கோர முயற்சித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த வருடம் இந்த சட்டத்திருத்தத்தை கண்டித்திருக்கின்றது. குற்றவாளிகள் சட்டத்திலிருந்து தப்புவதற்கு அரசாங்கம் இதன் மூலம் வழியமைத்துள்ளதாக அது தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# சர்வதேச கடற்பரப்பில் நிர்க்கதியான இலங்கை மீனவர்கள் மீட்கப்பட்டனர்

(கொழும்பு)

சர்வதேச கடற்பரப்பில் நிர்க்கதியான இலங்கை மீனவர்களை ஏற்றிய படகொன்றை இந்திய கரையோர பாதுகாப்பு பிரிவினர் காப்பாற்றியுள்ளனர்.

இந்தப்படகில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அதிலிருந்த மீனவர்கள் சர்வதேச கடற்பரப்பில் நிர்க்கதியானதாக கடற்றொழில் திணைக்களத்தின் தேடுதல் நடவடிக்கை பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னையிலுள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயத்திற்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து நாட்டின் கரையோர பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கை மீனவர்களை காப்பாற்றியுள்ளனர்.

சங்க இரண்டு எனும் குறிப்பிட்ட படகு தற்போது ஆந்திரா மாநிலத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தப் படகில் ஐந்து மீனவர்கள் இருப்பதாக கடற்றொழில் திணைக்களத்தின் தேடுதல் நடவடிக்கைப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை ஆராய சிவில் பாதுகாப்பு குழுக்கள்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை ஆராய்ந்து பார்ப்பதற்காக சிவில் பாதுகாப்பு குழுக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாளாந்தம் பதிவாகின்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் குறித்து நேற்று முன்தினம் மாலை அமைச்சில் விசேட பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றதாக அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

சிவில் பாதுகாப்பு உறுப்பினர்கள் ஊடாக உரிய தகவல்கள் பெற்றுக் கொண்டதும் நடைமுறைப்படுத்தும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சிறுவர்கள் மீதான துஷ்பிரயோக சம்பவங்கள் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படும் பட்சத்தில் அது குறித்து அதிகபட்ச சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு பிரதிநிதிகளை நியமிக்குமாறு சபாநாயகர் அறிவிக்கவில்லை

## நாடாளுமன்ற செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வுகாணும் நோக்கில் அமைக்கப்பட உள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு பிரதிநிதிகளை நியமிக்குமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அரசியல் கட்சிகளுக்கு அறிவிக்கவில்லை என நாடாளுமன்ற செயலாளர் தம்மிக கித்துல்கொட தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு தமது பிரதிநிதிகளை நியமிக்குமாறு சபாநாயகர் அரசியல் கட்சிகளுக்கு அறிவித்துள்ளதாக அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் பதில் அமைச்சரவை பேச்சாளர் பிரதிநிதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்திருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அப்படியான அழைப்பு எதுவும் கூட்டமைப்புக்கு கிடைக்கவில்லை என தெரிவித்தார்.

அதேவேளை தெரிவுக்குழுவிற்கு பிரதிநிதிகளை நியமிக்குமாறு சபாநாயகர் இதுவரை தமக்கு அ்ழைப்பு விடுக்கவில்லை என ஜே.வி.பியும் கூறியுள்ளது.

(ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை முன்னரே வெளியிடப்படக்கூடிய சாத்தியம்

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை முன்னதாகவே வெளியிடப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதியளவில் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு அறிக்கை வெளியிடும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் அதற்கு முன்னதாகவே ஆணைக் குழுவின் அறிக்கைகள் வெளியிடப்படலாம் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வடக்கு- கிழக்கிற்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது மட்டுமன்றி எல்லை நிர்ணயம் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தும் என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் மதிப்பளித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகவும் இதற்கு சில மேற்குலக நாடுகள் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# உள்நாட்டு பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுத்திட்டம் அவசியம்

## சிரேஷ்ட சட்டத்தரணி கோமின்தயாசிறி தெரிவிப்பு

அடுத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் நடைபெறுவதற்கு முன்னதாக மனித உரிமை மீறல் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் அரசாங்கம் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுத் திட்டம் துரித கதியில் முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

போலியான தகவல்களை கொண்ட ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கையின் அடிப்படையில் இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு யதார்த்தமான தீர்வு திட்டங்களை முன்வைக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ஆணைக்குழுவின் அறிக்கை அமைய வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# 6 கோடி மோசடி வழக்கில் இரு சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

6கோடி ரூபாவிற்கு மேற்பட்ட பணம் மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் தேடப்பட்டுவந்த இரு முக்கிய சந்தேக நபர்களை கொழும்பு ஊழல் ஒழிப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களுக்கு எதிராக 25 ற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் மெக்சிபுறொக்டர் குறிப்பிட்டார்.

கிருலப்பனை மற்றும் மொரட்டுவை ஆகியபகுதிகளில் சந்தேகநபர்கள் சட்டவிரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிலையங்களை நடத்திச் சென்றுள்ளமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

பாணந்துறை, கண்டி, கிருலப்பனை நாரஹேன்பிட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்களின் பணத்தை இவர்கள் மோசடி செய்துள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனின் விசேட பணிப்புரையின் பேரில் கொழும்பு ஊழல் ஒழிப்பு பிரிவினர் இது தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டு வந்தனர்.


இதன்போது கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ்தலைமையகம் அறிவித்துள்ளது.

'கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தினரால் தேடப்பட்டு வந்தவரென்று தெரியவந் துள்ளது.

சந்தேகநபர்களை பாதாள உலகக் கோஷ்டியினருடன் தொடர்பு பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(4-2)







ஆக்க இசைக்கலைஞரும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் என். சண்முகலிங்கனின் ஆத்மா உளசமூக வலிமைக்கான ஆரம்ப இறுவெட்டு வெளியீட்டு வைபவம் நேற்று யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் தலைமையுரையினை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவதையும் இறுவெட்டின் முதல்பிரதியை கல்விக்காருண்யனும் தொழிலதிபருமான ஈ.எஸ்.பி.நாகரத்தினம் பேராசிரியர் என்.சண்முகலிங்கனிடமிருந்து பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம். (படங்கள் :-அலுவலகச் செய்தியாளர்)

# யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையா
# 20ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்பும

## அருள் ஆசிச்செய்தி



யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் இன்று தனது 20 ஆண்டு நிறைவை அடைந்திருப்பதையிட்டு மகிழ்வடைந்தோம். மக்களின் தேவைகளில் மிக முக்கியமானது உணவு. இத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இது முக்கிய இடத்தை வகிக்கிறது. சுவையும் சுத்தமும் போசாக்கும் கொண்ட இடை நேர உணவுகளை மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பணியில் 20 ஆண்டுகள் நிறைவான சேவையையும் ஆற்றி மக்களின் நன்மதிப்பை பெற்றுள்ளது.

வரப்போகின்ற காலங்களும் சுத்தமானதும் சுகாதாரமும் போசாக்குள்ள உணவுகளை தயாரித்து வழங்குவதில் முன்னிலை வகிப்பதற்கும் இறையருள் கிடைப்பதாகவும் இப்பணியில் ஈடுபட்டிருக்கும் தலைவர், செயலாளர் அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும்இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

## பேக்கரி உரிமையாளர்களின் தொழில் உற்பத்திக்கு உரமாக விளங்கியமை



யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர்களின் தொழிற் சிறப்புக்கு உரமாக விளைந்த பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் வளர்ச்சி கண்டு பெருமகிழ்வடைகின்றேன்.

அதன் இருபது ஆண்டுகள் சேவையும் அதனால் யாழ். மாவட்டம் பெற்ற பயன்களும் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இந்நாளில் மீள நினைவுறுத்தப்படுவதை வரவேற்கின்றேன். மேலும் தொடரும் நாட்களில் முகிழ்க்கும் பணிகளில் சங்கம் எமது மக்களின் தேவையையும் சங்கத்தின் சிறப்பையும் என்றும் போல் மேம்படுத்தி உழைக்கும் என நம்புகின்றேன்.

நாமும் நமது மக்களும் உரிமையுடன் உலவுகின்ற எமது வாழ்வுக்காய் ஒன்றிணைந்து உழைக்க உறுதியுடன் முன் நடப்போம். சங்கம் 20 ஆண்டு நிறைவின் நினைவாக வெளியிடும் விழா மலருக்கு யாழ். மகன் என்ற உரிமையுடனும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் செய்தி வழங்குவதில் உவப்படைகின்றேன். சங்கம் தனது செயற்பாடுகளில் சிறப்புற்றுயரவும் சங்கத்தின் உயிர்ப்புறு சொத்தாக வெளிவரும் ஆண்டு மலர் மிளிரவும் வாழ்த்துகின்றேன்.

ஈ.சரவணபவன்,
யாழ்.மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு–பாராளுமன்ற உறுப்பினர்.

## சகல மக்களும் ஏற்றத்தாழ்வு இன்றி பேக்கரி பொருட்களை பெற்றனர்



யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தனது இருபதாம் ஆண்டு நிறை வினைப் பூர்த்தி செய்தமையையும் அதனையிட்டு மலர் வெளியீடு செய்வதனையும் இட்டு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ். மாவட்டத்தில் 2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தரைவழிப்பாதை தடைப்பட்டிருந்த காலப்பகுதியில் மாவட்ட செயலகத்தினால் கப்பல்மூலம் பொருட்கள் தருவிக்கப்பட்ட பொழுது யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தனது அங்கத்த வர்களுக்கு தேவையான கோதுமைமாவினையும் இதர பாண் உற்பத்திப் பொருட்களினையும் உரிய முறையில் பெற்று சீரான முறையில் வழங்கிய பணி சிறப்பானதாகும்.

யாழ். மாவட்ட செயலகத்தினால் ஒவ்வொரு காலப்பகுதியிலும் பாணிற்கும் ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களுக்கும் விலையினை நிர்ணயிக்கும் பொழுது அவ் விலை மாற்றத்தினை ஏற்று யாழ். மாவட்டத்தில் பாணிற்கான சீரான விலையினை உடனுக்குடன் நடைமுறைப்படுத்தியமை சிறப்பானதாகும். மேலும் யாழ். மாவட்டத் திலுள்ள பெரும்பாலான பேக்கரிகளை உள்ளடக்கி இச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ள மையால் அதில் அங்கத்துவம் பெரும் ஒவ்வொரு பேக்கரியும் அதனை தொழிலாக கொண்டு இயங்கும் குடும்பங்களும் நன்மை அடையும். அதேவேளை யாழ். மாவட் டத்திலுள்ள சகல மக்களும் ஏற்றத்தாழ்வற்ற விலையில் பேக்கரி உற்பத்தி பொருட் களை கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதும் பாண், பேக்கரி உற்பத்தி பொருட்களையும் மாவட்ட மட்டத்தில் சிறந்த தரத்திலும் அதேவேளை ஒரே விலையிலும் பெற்றுக்கொள்ளக்கூடிய சூழல் நிலைத்திருப்பது பாராட்டத்தக்கது. யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் மென்மேலும் வளர்ச்சி அடைந்து யாழ். மாவட்ட மக்களிற்கு மேலும் பல சேவைகளை ஆற்ற வேண்டும் என்றும் வாழ்த்துக் கூறுகின்றேன்.

ம.பிரதீபன், திட்டப்பணிப்பாளர்,
மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## பேக்கரி உரிமையாளர்களுக்கும், நுகர்வோருக்கும் ஆற்றிவரும் அளப்பரிய சேவையானது புகழத்தக்கது



யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த பத்து வருட கால கோதுமை மாவின் விற்பனையோடு நெருங்கிய தொடர்பை பேணி வந்துள்ளவன் என்ற வகையில் இச்சங்கம் யாழ். மாவட்டத்தில் ஒரு விருட்சமாக திகழ்ந்து பேக்கரி உரிமையாளர்களுக்கும் நுகர்வோருக்கும் ஆற்றிவரும் அளப்பரிய சேவையானது புகழத்தக்க அரும் பெரும் செயல் ஆகும். கோதுமைமாவினை அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் உங்கள் சங்கத்தின் மீது நாம் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளோம். மேலும் நீங்கள் தொடர்ந்து உங்கள் நுகர்வோரையும் விற்பனையாளர்களையும் பராமரித்து முன்மாதிரி கையாளும் வகையில் தொண்டு செய்வீர்கள் என நம்புகின்றேன்.

நாங்களும் உங்களது எல்லா எதிர்கால முயற்சிகளிலும் வளர்ச்சியிலும் பணிபுரிந்து உண்மையாக உழைப்போம் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன். யாழ். குடாநாட்டில் உங்கள் சேவைக்கு தொடர்ந்து எமது ஆதரவும் ஒத்துழைப் பும் என்றும் இருக்கும் என்பதோடு சங்கத்திற்கும் சங்க அங்கத்தவர்களுக்கும் உங்கள் எதிர்காலம் சுபீட்சமானதாகவும் ஒளிமயமானதாகவும் அமைய எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. அப்துல்காதர், விற்பனை சந்தைப்படுத்தல்
கட்டுப்பாட்டாளர், செரண்டிப் மா கம்பனி.

## ஆயரின் ஆசிச்செய்தி



"அடுத்தவருடைய நன்மைக்காவும் வளர்ச்சிக்காகவும் செயற்பட்டு அவர்களுக்கு உகந்தவர்களாக வாழுங்கள் (உரோ. 15:2)" என்ற இறைவார்த்தைக்கு அமைய கடந்த 20 வருட காலமாக எமது யாழ். மாவட்டத்திலேயே மக்கள் சேவையை இலக்காகக் கொண்டு செயற்படும் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கமானது தனது பணியில் 20 வருடங்களை வெற்றியோடு பூர்த்தி செய்யும் இம் மகிழ்வான நேரத்தில் நானும் உங்களுடன் இணைந்து மகிழ்கின்றேன்.

மக்களின் அவசிய உணவுகளை குறிப்பாக எல்லோரும் தம் உணவாக நம்பிக்கையுடன் உட்கொள்ளும் பாண் உணவினை எமது பேக்கரிகள் உற்பத்தி செய்கின்றன. காலத்திற்கு காலம் பல உணவுகளை மக்களின் தேவைகளோடு சேர்த்து உற்பத்தி செய்து வழங்கும் உங்கள் சேவை பாராட்டுக்குரியது. கடந்த போர்க் காலங்களிலும பல கஷ்டங்கள் மத்தியிலும் எல்லா பேக்கரி உரிமையாளர்களும் ஓர் சங்கத்தின் கீழ் ஒன்றித்து உழைத்து எம் மக்களின் பசி போக்க உழைத்துள்ளீர்கள்.

இனிவரும் நாட்களிலும் உங்கள் சேவை மென்மேலும் எல்லா மக்களினதும் நலன் கருதி எல்லோரும் அடிப்படை உண்டிகளை பெற்றுக் கொள்ளும் முறையில் திட்டமிட்ட நற்சேவையை இன்றுபோல் தொடர்ந்தும் வழங்க பேக்கரி உரிமையாளர் சங்க ஒவ்வொரு அங்கத்தர்களையும் வாழ்த்தி இறை ஆசி வேண்டி நிற்கின்றேன்.

மேதகு.இ.தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ். ஆயர்.

## மக்களுக்காற்றிய பங்கு மகத்தானது



யாழ். மாவட்ட உரிமையாளர் சங்கம் யாழ். மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெரும் பங்காற்றி வருகின்றது. குறிப்பாக அனர்த்த காலப்பகுதிகளிலும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் இச் சங்கம் மக்களுக்காற்றிய பங்கு மிகவும் மகத்தானது. ஏ9 பாதை மூடப்பட்டிருந்த காலப் பகுதிகளில் கோதுமை மா போன்ற உற்பத்திப் பொருட்களை இச் சங்கம் கப்பல்மூலம் பெற்று யாழ். மாவட்டத்தில் உள்ள பேக்கரி உரிமையாளர்களுக்கு விநியோகம் செய்து சிறப்பாக செயலாற்றியமை நினைவுகூரத்தக்கது.

மேலும் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் 20 ஆண்டினை நிறைவு செய்து இம்மலரினை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் யாழ்.மாவட்ட மக்களுக்காற்றிய சேவைகளுக்காக வாழ்த்துத் தெரிவித்து மென்மேலும் சிறப்புற சேவையாற்ற இறையாசியையும் வேண்டி நிற்கின்றேன்.

திருமதி.ரூபினி வரதலிங்கம்,
மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.

## ஒன்றுபட வேண்டுகின்றேன்



யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் வருடம் தோறும் தமது அளப்பரிய சேவையை நினைவு கூறும் வகையில் ஆண்டு விழாவை இதய சுத்தியுடன் கொண்டாடி வருவது கண்டு நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆண்டுதோறும் இவ்விழா இடம்பெற்று வருவதுடன் இந்நிறுவனத்தின் விளைதிறனை பயனாளிகள் மற்றும் அனைவருக்கும் எடுத்தியம்புவதாக அமைவதும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூரத்தக்க பெருமைக்குரியதாக நான் கருதுகின்றேன். அந்த வகையில் இந்த வருடமும் 20 ஆவது நிறைவு விழாவை கொண்டாட இருப்பதையிட்டு எனது அன்பான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் நான் பெருமையடைகின்றேன்.

1990 ஆம் ஆண்டு உருவாக்கம் பெற்ற இச்சங்கம் பல்வகையிலும் வளர்ச்சி கண்டுள்ளது. மாவட்ட தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள் அங்கத்தவர்கள் அனைவரது அயராத உழைப்பினால் இச்சங்கம் உருவாக்கப்பட்டது மிகச் சிறந்த அம்சமாகும். இவர்கள் அனைவரதும் அளப்பரிய சேவையை நாம் என்றென்றும் மறந்து விட முடியாது. சிறந்த உற்பத்திகளை தயாரித்து பயனாளிகள் தேவைகளை பூர்த்தி செய்வதில் இச்சங்கம் முன்னணியில் இருந்து வந்ததை அனைவரும் அறிவர். இது இவ்வாறு இருக்க தற்போது இச்சங்கம் இரண்டாக இயங்குவதை நினைக்கும் போது வேதனை தருகின்றது. ஒரு அணியின் கீழ் இயங்கி மக்களுக்கு சேவை செய்து புகழின் விளிம்பில் நின்று நிலைத்த இந்நிறுவனம் இவ்வாறான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது துரதிர்ஷ்டமே.


எனவே தயவு கூர்ந்து இந்நிலையை மாற்றியமைத்து ஒரு கொடியின் கீழ் அணியாக திரண்டு இந்நிறுவனத்தை வளர்த்தெடுக்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை இதயசுத்தியுடன் இந்நாளில் முன்வைக்க விரும்புகின்றேன்.

முன்னாள் மாவட்ட தலைவர் என்ற வகையில் இந்த அன்பான வேண்டுகோள் முன்வைக்கப்படுகிறது என்புதையும் நான் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கோரிக்கையை கோரிக்கையாக எடுத்து விடாமல் எனது அன்புக் கட்டளையாக ஏற்றுக் கொண்டு செயற்படுவீர்கள் என்று நம்புகின்றேன்.

எல்லாம் வல்ல இறைவனுடைய ஆசி வேண்டி எனது நல்வாழ்த்துக்களை சமர்ப்பித்து எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

த.சிவசுப்பிரமணியம்,
முன்னாள் மாவட்ட தலைவர்,
யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.

## அங்கத்தவர் சார்பில்



எமது சங்கமானது கடந்த 20 ஆண்டுகளாக பல இன்னல்களுக்கு மத்தியிலும் குடாநாட்டு மக்களுக்கு மன நிறைவுடன் சேவையாற்றியுள்ளது. குறிப்பாக கடந்த 2006 குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கிய உணவுத் தட்டுப்பாட்டின் போது மக்களுக்கு நிறைவான சேவை எமது அனைத்து பேக்கரி உரிமையாளர்களும் திறம்பட செய்துள்ளனர்.

இதேபோன்று இனிவரும் காலங்களிலும் எமது சங்கம் மென்மேலும் சேவையாற்றி மக்கள் மத்தியில் நன்மதிப்பை பேண வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

சோ. பிரபாகரன் ,அம்மன் பேக்கரி,
யாழ்ப்பாணம்.

## வெறுமனே வியாபார நோக
## மக்கள் பணியாக செய



யாழ் மாவட்ட பேக்கரி உரி
20ஆவது வருட நிறைவைப் பூ
இதனை ஆவணப்படுத்தும்
விசேட மலருக்கு வாழ்த்துச் செ
யிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சிய
வர்த்தகத் துறை சார்ந்த நி
கின்ற பேக்கரிகள் எமது மக்க
தேவைகளுக்கு தம்மால் இய
வருகின்றன. குறிப்பாக யாழ். ம
ஏற்பட்டிருந்த அசாதாரணச்
மக்களின் உணவுத் தேவையினை தம்மால் இயன்ற
செய்துள்ளமையை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.
வெறுமனே வியாபார நோக்கத்தை மாத்திரம் கொண்
கருதி யாழ். மாவட்ட பேக்கரிகள் பல செயற்பட்டு வருகி
சார்பாக எனது நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்
தொடர்ந்தும் இந்த கடமைப்பாட்டினை பேக்கரி உரிமைய
டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.
தனது 20 ஆவது வருடத்தை பூர்த்தி செய்கின்ற யாழ்.
சங்கத்திற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்
உழைத்துள்ள அனைவருக்கும் எனது நன்றியையும்
கொள்கின்றேன்.

டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்
செயலாளர் நாயகம் ஈ.பி
பாரம்பரிய கைத்தொழில்கள்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்
இணைத்தலைவர்– யாழ். தேர்தல் மாவட்ட

## வங்கிச் சமூகத்தின்

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் (JDM
நிறைவை கொண்டாடுவதையிட்டு எமது வங்கிச் சமூக
பதுடன், மேலும் மேலும் தரமான தனது தயாரிப்புகளை
வழங்கி நிலைத்திருக்க வேண்டும் என இதயபூர்வமா
கின்றேன்.

திரு.த.தேவராஜன்,
சிரேஷ்ட முகாமையா
கொமர்ஷல் வங்கி, யாழ்ப்ப


## உள்ளம் நிறைவோடு நன்

எங்களது சங்கத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு வி
முன்னிட்டு எம்மால் வெளியிடப்பட்ட மேற்படி நினை
ருக்கு தங்களது பொன்னான நேரத்தை ஒதுக்கி எ
கத்தினதும் நிர்வாகத்தினதும் அங்கத்தவர் மற்று
யாளர்களினதும் சிறப்பை மேன்மைப்படுத்தி தா
கருத்துக்கள் மூலம் எமக்கு மேன்மேலும் உத்வேகம்
ஆசி கூறிய மதகுருமார்களுக்கும் எம் பணிதொடர வா
கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பாரா
உறுப்பினர் அவர்களுக்கும் மற்றும் எமது உற்பத்தி
பொருளான கோதுமைமா உற்பத்தி நிறுவனத்தினர்க
மற்றும் அரச அதிகாரிகளுக்கும் மற்றும் வங்கி மு
அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது சங்கத்தின்
நன்றியைத் கூறி விளைவதுடன் மேற்படி எமது சங்கமா
திட்டப் பணிப்பாளராக இருந்த திரு.பத்மநாதன் அவர்
சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் ஆரம்பி
அப்போது எமது பிரதேசத்தில் கோதுமைமாவிற்கா
தால் அன்றைய நிலைமையில் மக்களின் அத்திய
உணவை சீரான விலையில் சகலருக்கும் கிடைக்
கொண்டு எமது சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முத
மாவட்ட அரச அதிபரினதும் விலைக்கட்டுப்பாட்டு பகு
ஏற்று எமது இலாபத்தினை மட்டும் கருதாது செயற்பட்
எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது அங்கத்தவர்க
நிர்ணய விலையை மீறியது கிடையாது. எமது ச
வளர்ச்சியிலும் நுகர்வோர்களினது திருப்தியிலும்
சிறியளவிலான சமூக சேவையிலும் ஈடுபட்டு வருகிறது
குறிப்பாக தரைவழிப் பாதை தடைப்பட்ட 2006 ஆ
சங்கமானது மாவட்ட செயலகத்துடன் இணைந்து
ழைப்புடன் மக்கள் சேவையே மகேசன் சேவை எ
வருமானத்தை மட்டும் எதிர்பாராது எமக்கு இலாபமளிக்
றவற்றை உற்பத்தி செய்யாது அந்த இக்கட்டான கா
தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்த மனநிறைவு
தீவினிலேயே தமது உறுப்பினர்களுக்கு உற்பத்திக்கா
உப மூலப்பொருட்களையும் கடந்த 20 ஆண்டுகளாக
சங்கம் மட்டுமே என்ற பெருமையுடனும் கோதுமை
சிலோன் லிமிட்டெட்டின் அங்கீகாரம் பெற்ற விநியோ
யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தொட
செய்துள்ளது என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்
அங்கத்தவர்களும் மக்கள் தேவைக்கு முன்னுரிமை
சேவை செய்ய காத்திருக்கிறது. மேலும் எமது சங்கத்
வரையும் ஒரு கொடியின் கீழ் இணைந்து செயலாற்ற வ
கூப்பி வர வேற்கிறேன். மேலும் எமது செயற்பாட்டிற்கு
இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகின்றேன். அனைவரு
எண்ணங்கள் விரைவில் நிறைவேற இறையருள் வே
கூறி விடை பெறுகின்றேன்.

கா.பாஸ்கரன்,
மாவட்ட செயலாளர், யாழ்.மாவட்ட பேக்க

விளம்பர அனுசரணை:–
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர்

# ளர் சங்கம்
# லர்-19.09.2011



## க்கம் இல்லாது ற்படுகிறது

மையாளர்களது சங்கம் தனது
பூர்த்தி செய்கின்ற அதேவேளை
வகையில் வெளியிடுகின்ற
சய்தியொன்றை வழங்குவதை
டைகின்றேன்.
றுவனங்களாக செயற்பட்டு வரு
ளின் அத்தியாவசிய உணவுத்
ன்ற பங்களிப்புக்களை வழங்கி
ாவட்டத்தில் கடந்த காலங்களில்
சூழ்நிலைகளின் போது எமது
வகையில் பேக்கரிகள் பூர்த்தி
ாடிராமல் மக்கள் பணியாகவும்
ன்றமை குறித்து எமது மக்கள்
கொள்கின்றேன். அதேநேரம்
ாளர்கள் கடைப்பிடிக்க வேண்
மாவட்ட பேக்கரி உரிமையாளர்
துடன் இந்த மலர் தயாரிப்பில்
பாராட்டினையும் தெரிவித்துக்

உறுப்பினர்,
டி.பி,
மற்றும்
அமைச்சர்,
ஒருங்கிணைப்புக்குழு.

## பாராட்டு

A) தமது இருபதாவது ஆண்டு
ம் பாராட்டுக்களைத் தெரிவிப்
மக்கள் சமூகத்திற்கு தொடர்ந்து
ன வாழ்த்துக்களை வாழ்த்து

ர்,
ணம்.

## றி கூறுகிறேன்




ாவை
மல
சங்
பணி
களது
ண்டு
த்துக்
மன்
மலப்
க்கும்
மையாளர்களுக்கும் மற்றும்
ர்பாக எனது இதயபூர்வமான
து 1991ஆம் ஆண்டு அப்போது
ரின் கோரிக்கைக்கு ஏற்ப திரு.
கப்பட்டது.
தட்டுப்பாடு நிலவிய காரணத்
சிய தேவைகளில் ஒன்றான
செய்வதே குறிக்கோளாகக்
கடந்த 20 ஆண்டுகளில் எமது
பினரதும் அறிவுறுத்தல்களை
ருகிறோம்.
கிய பேக்கரி உரிமையாளர்கள்
மானது அங்கத்தவர்களின்
திக அக்கறை காட்டியதோடு
ஆண்டு காலப்பகுதியில் எமது
து அங்கத்தவர்களின் ஒத்து
உயரிய நோக்கோடு எமது
ம் பணிஸ் மற்றும் கேக் போன்
பகுதியில் மக்களின் உணவுத்
ும் அதேவேளை இலங்கைத்
லப் பொருட்களையும் மற்றும்
ாடர்ந்து வழங்கி வருவது எமது
ற்பத்தி நிறுவனமான பிறிமா
தர் என்ற பெருமையும் எமது
09 வருடங்களைப் பூர்த்தி
டன் தொடர்ந்து எமது சங்கமும்
டுத்து சட்டதிட்டங்களை ஏற்று
ருந்து விலகி நிற்கும் அனை
ாறு இவ்வேளையில் இருகரம்
ன்றின்ற பணியாளர்களிற்கும்
ன்றிணைவதன்மூலம் எமது
மீண்டும் யாவருக்கும் நன்றி

உரிமையாளர் சங்கம்.

## கத்தின் மைந்தர்கள்

## மாவட்ட தலைவரின் உள்ளத்திலிருந்து



1991 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 19 ஆம் திகதி அமைக்கப்பட்ட எமது சங்கம் இன்று ஆல விருட்சமாய் வளர்ந்து இரு தசாப்தங்களை அடைந்து புதுப்பொலிவுடன் விளங்குகின்றது. பல்வேறுபட்ட துன்ப துயரங்களுக்கு மத்தியில் எமது மக்களின் அடிப்படைத் தேவைகளில் பாண் மிகவும் இன்றியமையாததாக அமைந்தது.

அவ்வேளைகளில் எல்லாம் எமது சங்கமானது மக்கள் சேவையே மகேசன் சேவை என மனம் கொண்டு செயற்பட்டது. அவ்வாறு செயற்பட்டதனால் எமது சங்கம் 20 ஆண்டுகள் கடந்து வெற்றிக் கொடி கட்டி நிற்கின்றது.

எமது சங்கத்தின் நிதியில் ஒரு பகுதியை எமது சபையின் அனுமதியோடு சமூக சேவைகளுக்கும் வழங்கி வருகின்றோம். பல்வேறுபட்ட சமூகத் தேவைகளில் பயன்படும் எமது நிதியானது மக்களுடையதே. ஆகவே எமக்கு வரும் இலாபத்தில் ஒரு பகுதியை பயன்படுத்துவதையிட்டு எமது சபை மகிழ்கின்றது.


இவ்வாறான பல்வேறுபட்ட வழிகளில் செயற்பட்டு உயர்ந்து நிற்கும் சங்கத்துக்கு நான் தலைவராக இருப்பதையிட்டு பெருமையடைகின்றேன்.

இச்சங்கமானது அங்கத்தவர்களின் நலன்கருதி கடன் வசதிகளையும் கழிவுகளையும் காலத்திற்கு ஏற்ப வழங்கி வருகின்றது.

அனைத்து அங்கத்தவர்களும் சங்கத்தை தமது குடும்பம் போல் நினைத்து தேவையான ஆலோசனைகளையும் ஒத்துழைப்புக்களையும் நல்கி மென்மேலும் சங்கம் வளர உழைக்க வேண்டும் என வேண்டி எல்லாம் வல்ல இறைவனை பணிந்து நிறைவு செய்கின்றேன்.

**இ.பேரின்பநாயகம், மாவட்ட தலைவர்,**
**யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.**

## சிறந்த வாடிக்கையாளர்கள்



எமது மக்கள் வங்கிக் கிளையின் சிறப்பான வாடிக்கையாளர்களுக்குள் ஒன்றாக திகழ்ந்த, நிகழ்ந்து கொண்டிருக்கின்ற யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது மக்கள் வங்கிக் கிளையில் 1997 ஆம் ஆண்டிலிருந்து கணக்கினை பராமரித்து வருகின்ற இச் சங்கமானது எமது சிறந்த வாடிக்கையாளர்களுள் ஒன்றாக சிறப்பாக பராமரித்து வருவதுடன் தன்னுடைய உறுப்பினர்களுக்கு உன்னத சேவையை வழங்கி தனக்கென ஒரு சிறப்பான இடத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

தனது இருபதாவது ஆண்டின் நிறைவினை கொண்டாடிக்கொண்டிருக்கின்ற இச்சங்கமானது மென்மேலும் வளர்ந்த தன்னுடைய மகத்தான சேவையால் உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும் பணி செய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.மு.சிவசுப்பிரமணியம், முகாமையாளர்,**
**மக்கள் வங்கி, பிரதான வீதி.**

## பணிசிறக்க வாழ்த்துகின்றேன்




20 ஆண்டினை பூர்த்தி செய்து பெரு வளர்ச்சி கண்டுள்ள எமது யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினை வாழ்த்துவதில் பெரும் மகிழ்வு அடைகிறேன்.

யாழ். மாவட்டத்தினை பொறுத்தவரையில் இரு தசாப்த காலங்களிலும் பல்வேறுபட்ட இன்னல்கள் இடர்கள் வந்த போதும் அவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்து அதனை ஒரு சவாலாக ஏற்று தனது அங்கத்தவர்களினது பூரண ஒத்துழைப்புடன் செயற்பட்டு யாழ். குடா நாட்டு மக்களுக்கு நியாயமான விலையில் எமது தரமான உற்பத்திப் பொருளினை மூலப்பொருளாக கொண்டு தமது உற்பத்தி பொருட்களை தேவைக்கேற்ப வழங்கிய அதேவேளை எமது அங்கத்தவர்களினதும் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி இன்று வரை வளர்ச்சி பாதையினை நோக்கி நகர்ந்து அனைவரினதும் பாராட்டினைப் பெற்று அப்பணியில் திறம்பட ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சங்கம் 20 ஆம் ஆண்டினை தொட்டு நிற்கும் இச்சந்தர்ப்பத்தில் நான் எனது வாழ்த்தினை தெரிவிப்பதற்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்ததை இட்டு பெரு மகிழ்வு அடைவதோடு சங்கத்தின் இவ்விரு தசாப்த கால பயணத்தில் சங்க செயற்பாடுகளை பொறுப்பேற்று வழி நடத்திய, வழிநடத்திக் கொண்டிருக்கும் தலைவர்கள், செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்களையும் வாழ்த்துவதோடு இனிவரும் காலங்களிலும் இதேபோன்று தங்களது பணி மென்மேலும் வளர்ச்சிபெற்று யாழ். குடாநாட்டு மக்களுக்கு தங்களின் அரிய சேவையினை வழங்க வாழ்த்துவதோடு தொடர்ந்தும் உங்களின் வளர்ச்சியில் ஒரு பங்காளர்களாக இருப்போம் என்ற நம்பிக்கையுடன் நிறைவு செய்கின்றேன்.

**இராதாகிருஸ்ணன் செந்தில்**
**Field Sales Manager,**
**Prima (Ceylon) LTD.**

## எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களை மகிழ்வித்து




நான் இந்த செய்தியை தங்கள் சங்கத்தின் தலைவர், செயலாளர், பேக்கரி உரிமையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டு தசாப்தகாலமாக தங்கள் சங்கம் செய்த சேவைகள் அளப்பரியன.

பிறிமா நிறுவனத்தின் கோதுமைமாவினை அங்கத்தவர்களுக்கு வழங்கி அதன்மூலம் தரமான பேக்கரி உற்பத்தி பொருட்களை தயாரித்து தரம்வாய்ந்த பொருட்களை நுகர்வோருக்கு வழங்கி அவர்களின் ஆதரவினை பெற்றுக் கொண்டதனை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். உங்கள் பணி மேலும் தொடர்ந்து எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களை மகிழ்வித்து மேலும் முன்னேற்றம் காண்பீர்கள்.

மீண்டும் எனது நன்றிகளை கூறிக்கொண்டு தங்கள் சங்கத்தின் இருபது வருட அளப்பரிய சேவையை வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் எமது ஆதரவு ஒத்துழைப்புக்கள் எமது நிறுவனத்தின்மூலம் கிடைக்கும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**அன்றூ டவுசன், விற்பனை சந்தைப்படுத்தல்**
**கட்டுப்பாட்டாளர், பிறிமா சிலோன் லிமிட்டெட்.**

# இலங்கைக்கு எதிராக நிபந்தனைகள் விதிக்கப்படக்கூடிய சாத்தியம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்படக் கூடிய வாய்ப்பு காணப்படுவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்சில் அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்க வேண்டுமாயின் சில நிபந்தனைகளுக்கு உடன்பட வேண்டுமென அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்சிலின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மற்றும் மேற்குலக நாடுகளின் பிரதிநிதிகள் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தல், வடக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத் திட்டம் முன்வைத்தல் அல்லது மாகாணசபைத் தேர்தலை நடத்தி ஜனநாயக பொறிமுறைமையை ஏற்படுத்தல் போன்ற பல்வேறு முக்கிய நிபந்தனைகள் விதிக்கப்படக் கூடும் என இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனித உரிமைக் கவுன்சிலில் இம்முறை இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஶ்ரீ-2)

# பான் கீ மூனின் செயற்பாட்டை விமர்சித்து இலங்கை கடிதம்



ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனின் செயற்பாட்டை விமர்சித்து இலங்கை அரசாங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. நாளை செவ்வாய்கிழமையன்று ஐக்கிய நாடுகள் 66 ஆவது பொதுச் சபையில் உரையாற்றுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நியூயோர்க் பயணமாகியுள்ளார். இந்த நிலையிலேயே பான் கீ மூனுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த கடிதத்தை அனுப்பும் உத்தரவு ஐக்கிய நாடுகளின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி பாலித கோஹனவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் சமர்ப்பித் தமை, ஐக்கிய நாடுகளின் ஒழுங்குகளை மீறும் செயல் என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பான் கீ மூன் உறுப்பு நாடுகள் விடயத்தில் தனிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்தல் , சர்வதேச நாடுகள், அவ்வாறு நடக்காதிருக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நியூயோர்க் செல்லும் ஜனாதிபதி அங்கு பல்வேறு நாடுகளின் தலைவர்கள், வெளியுறவு அமைச்சர்கள் உட்பட்டவர்களை சந்திக்கவுள்ளார். (ஶ்ரீ-2)

# நெதர்லாந்து நீதிமன்றில் இலங்கையின் கொலைக்களம் காணொளி காண்பிப்பு

(கொழும்பு)

கடந்த 16 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்ட 5 தமிழ் மனிதநேயச் செயற்பாட்டாளர்களின் வழக்கு விசாரணை கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நெதர்லாந்தில் நடந்துகொண்டிருக்கும் இவ் வழக்கின் 2ஆம் நாள் அமர்வில் ஐரோப்பிய நாடுகளால் தடை செய்யப்பட்ட அமைப்பாளர் தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கையில் சிறுவர் படைசேர்ப்பு கரும்புலிகள் தாக்குதல் சர்வதேச ரீதியில் பயங்கரவாத செயலில் ஈடுபட்டார்களா? இல்லையா? என்ற விடயங்கள் பற்றிய விவாதங்கள் இடம் பெற்றன.

இந்த அமர்வில் ஐரோப்பிய நீதிமன்றில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தடையை நீக்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்திருக்கும் பிரபல வழக்கறிஞர் விக்ரர் கொப்பேயின் வேண்டுகோளுக்கிணங்க நீதிபதியின் அனுமதியுடன் அண்மையில் சனல் 4 தொலைக் காட்சியில் வெளியான இலங்கையின் கொலைக்களம் ஆவணக்காட்சி திரையிடப்பட்டது.

இக்காட்சியினை அங்கு வருகை தந்த வழக்கறிஞர்கள், பொலிஸார், பொதுமக்கள் பார்வையிட்டனர்.

இக்காட்சியினைப் பார்த்து அதிர்ந்து போன பல வழக்கறிஞர்கள் இவ் வழக்கினை மேற்கொண்டு நடத்தவேண்டாம் என்றும் இவ் வழக்கினை அடுத்த வாரம் நடத்த வேண்டும் என்றும் இது எம் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது எனவும் கூறினார்.


இதைக்கேட்ட நீதிபதி ஒத்திவைக்க முடியாது எனவும் ஆனால் போதிய அளவு இடைவேளை விடுவதாகவும் கூறி, உடனடியாகவே இடைவேளையை அறிவித்தார்.

அதன் பின்னர் போதிய அளவு இடைவேளை பெற்று மீண்டும் வழக்கு தொடர்ந்து இடம் பெற்றது.

ஆயினும் வழமையான நேரத்திற்கு முன்பாகவே அமர்வு முடிவிற்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

# ஜனாதிபதி நியூயோர்க் விஜயம்

(கொழும்பு)




ஐக்கிய நாடுகள் சபையின் 66 பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி நாளை செவ்வாய்க்கிழமை ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் உரை நிகழ்த்தவுள்ளார்.

நியூயோர்க் செல்லும் ஜனாதிபதி அங்கு பல்வேறு நாடுகளின் தலைவர்கள், வெளியுறவு அமைச்சர்கள் உட்பட்ட பலரை சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

# நவீன எண் சோதிடம்



## தமது தனித்திறமையால் வாழ்வில் முன்னேற்றம் காண்பவர்கள்

49

## உடல் எண் 6 உயிர் எண் 2

6,15,24 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 2 வருமேயானால் இவர்கள் சுக்கிரன், சந்திரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்த வராவர்.

இவர்கள் பாரப்பதற்கு சுமாரான உயரமுடையவராகவும், ஓரளவு பருத்த சரீரமுடையவராகவும் இருப்பர். இளமையில் சதைப்பற்று இல்லாதவராக இருந்தாலும் வயது ஏறஏற பெருத்து விடுவர். பார்ப்பதற்கு கவர்ச்சியான தோற்றமும், தூய்மையான ஆடையும் அணிவர். தலையை அலங்காரம் செய்வதில் விருப்பமுடையவர். எப்பொழுதும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற ஆர்வமுடையவர்கள்.

இவர்கள் மனநிலை அடிக்கடி குழம்பி பின் தெளிவடையும். கிரகங்களில் சந்தரன் வளர்ந்து தேய்வது போல் இவர்களது மனநிலையும் ஏற இறங்கவுமாகவே இருக்கும். சிலர் இயற்கையிலேயே வசதி படைத்தவராக இருப்பர். இன்னும் சிலர் தமது தனித்திறமையால் முன்னேற்றங்காணுவர். வாதம் செய்வதிலும், குறுக்குக் கேள்வி கேட்பதிலும் சமாதானம செய்வதிலும் திறமை மிக்கவர்களாக

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

விளங்குவர். இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமையுமேயானால் வீடு, நிலம், வாகனம், தொழில் போன்றவைகள் அமையப்பெற்று சிறப்பாக விளங்குவர்.

இன்னும் சிலர் எழுதுவதாலும், வாதம் செய்வதாலும் வழக்குகளைத் தீர்த்து வைப்பதாலும் வைத்தியம்செய்வதாலும் பொருளீட்டுவர். ஆனால் பெயர் பொருத்தமின்றி அமைந்துவிட்டால் எல்லா வாய்ப்புகள் இருந்தும், கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகி, மனநிலை பாதிக்கப்பட்டு, கெட்ட முடிவெடுக்கும் சூழ்நிலை உண்டாகும். இதனால் பெயரை தனது பிறந்த தேதிக்கு பொருத்தமானதாக மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம்.

புகழ்ச்சிக்கு மயங்கும் இவர்கள் பிறர் தனது குறையைச் சுட்டிக் காட்ட முனைந்தால் அவர்களை வெறுப்பர். இதனால் தன் குறையை உணர்ந்து தானே திருத்திக் கொள்ள வேண்டும் . பிடிவாதக்காரரர் போல் காட்சியளிக்கும் இவர்கள் இளகிய மனம் கொண்டவர்களே! தன்னால் முடிந்த வரை தன்னைச் சார்ந்தவர்களுக்கு உதவ முன்வருவர் ஆனால், எவ்வளவு உதவி செய்தாலும் நன்றி கெட்ட உலகம் என்று அடிக்கடி கூறுவர். இப்படிப்பட்ட இவர்களுக்கு ஆண்டவன் எப்பொழுதும் அருள் புரிந்து கொண்டேயிருப்பர்.

மலைப்பிரதேசங்களையும், நீர்த்தேக்கங்களையும் நீர்வீழ்ச்சிகளையும், பசுமையான இடங்களையும் கண்டுகளிப்பதால் இவர்கள் மனம் அமைதி பெறும். திடீரென்று இவர்கள் மனம் எல்லாவற்றையும் வெறுக்கும். ஒரு பொருளை வேகமாக விரும்பி, அதே நேரத்தில் வெறுத்து விடுவர். இவர்களுக்கு பிறந்த தேதிக்குப் பொருத்தமான பெயர் அமையாவிட்டால் காமுகர்களாகவோ, போதைப் பொருளுக்கு அடிமையானவர்களாகவோ, சூதாட்டக்காரரகளாகவோ மாறி விடுவர். இதனால் பெயரைப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக் கொள்ளுவது அவசியம்.

எதையும் சந்தேகிக்கும் மனப்பான்மை கொண்டவர்களான இவர்கள் எக்காரியத்தையும் தானே நேரில் செய்ய வேண்டும் என்ற பிடிவாத எண்ணமுடையவர். சட்டம், சாஸ்திரம், கணிதம், ஜோதிடம் போன்றவற்றில் ஆர்வமுடையவர்கள். எப்பொழுதும் எதையாவது ஆராய்ந்து கொண்டே

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

இருப்பர். தனியாகச் செல்லுகின்ற போது தனக்குள் பேசிக்கொண்டே செல்வர். இவர்களுடைய பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமையுமேயானால் நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத் துணை, நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் பெற்று வாழ்வர்.

**தொழில்**

ஆடம்பரப் பொருட்கள், ஆபரணங்கள், கமிசன். கான்ட்ராக்ட், ஏஜென்சீஸ், வாகனம் போன்றவற்றால் லாபம் பெறுவர்.

**நோய்**

இவர்களுக்கு மன வியாதி, நீர் சம்பந்தப்பட்ட வியாதி, தோல் வியாதி, மூட்டுவலி, கண் சம்பந்தப்பட்ட வியாதி வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

இவர்கள் சுக்கிரன், சந்திரன், போன்ற ஆதிக்கத்தில் பிறந்ததால் சுக்கிரன் ஆதிக்கமான 15,24,33, 42,60,69, போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 6,7

யோகமான தேதிகள்-6,15,24, 7,16,25, 1,10,19,28

யோகமான நிறம்- பச்சை, வெளிர் நீலம்

யோகமான மோதிரக்கல்- மரகதம், ஜேட், டைகர்-ஐ மூன்ஸ்டோன்


ஆகாத தேதிகள்-3,12,21,30

ஆகாத நிறம்- சிவப்பு, ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூநிறம்

## பெயர் எண்களின் பலன்

**39 எண் பலன்**

பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்ட இவர்கள் யோகம் மிகுந்தவர்களே. சில நேரங்களில் உடல் நலக்குறைவாலும், பத்து, படை, போன்ற அரிப்பு வியாதிகளாலும் வருந்துவர். இவர்களுடைய உழைப்பால் கிடைக்கும் லாபத்தை பிறரும் அனுபவிப்பர். 3,12,21,30 போன்ற தேதியில் பிறந்தவர்கள் இப்பெயரை அமைத்துக் கொண்டால் வாகனம், நிலம், வீடு, கலைக்கூடம், ஆடம்பரப் பொருள் சம்பந்தமான தொழில், வெளிநாட்டுப் போக்குவரத்து போன்றவற்றைப் பெற்று பெரும் செல்வம் சேர்ப்பர். ஆனால் 6,15,24 போன்ற தேதியில் பிறந்தவர்கள் இந்த எண்ணில் பெயரை



வைத்துக் கொள்ளக் கூடாது.

**40 எண் பலன்**

இவர்களுக்கு பேச்சாலும், எழுத்தாலும் அதிகார உத்தி யோகத்தாலும் பெயரும், புகழும் உண்டாகும். தங்கம், வெள்ளி, நவரத்தினம், போன்றவைகளும் சேரும். தன் சுயநலத்திற்காக எதையும் செய்யத் துணிவர். கடைசியில் யாரும் மதிக்காத மனிதராவர். தன்னுடைய அந்தஸ்து, புகழ் இவைகள் எல்லாம் தலைகீழாக மாறிவிடும். இதனால் விரும்பத்தக்க எண் அல்ல.

**41 எண் பலன்**

இந்த எண்ணை பெயரில் உடையவர்கள் மனிதருள் மாணிக்கமாவர். எவராலும் செய்ய முடியாத காரியத்தைச் சாதிப்பர். நாடு போற்றும் நாயகனாவர். எவ்வழியிலும் உயர் பதவியை அடைவர். இவர்களுக்குத் தற்பெருமை மிகுமேயானால் தோல்வியைச் சந்திக்க நேரும். 8,17, 26,5,14,23,9,18,27 போன்ற தேதியில் பிறந்தவர்கள், பெயராக அமைத்துக் கொண்டால் பெரும் செல்வம், பெரும் புகழ் அடைந்து சீரும் சிறப்புமாக வாழ்வர். பொதுவாக எல்லாத் தேதியில் பிறந்தவர்களும் இந்த எண்ணைப் பயன்படுத்தலாம்.

**42 எண் பலன்**

இந்த எண் பெயராக அமைந்தால் ஆண்டவன் அருள் கிடைக்கும். திடமான மனநிலையும், நிலையான பொருளாதார வசதியும் அமையும். தன்னைச் சார்ந்த சமயத்திற்கு மட்டும் செலவிடுவர். சுயவாழ்க்கையில் சிக்கனமாக இருப்பர். தானாகவே நல்ல பதவிகள் வந்து சேரும். பொதுவாக நோய்கள் குணமாகும். ஆனால் 3,12,21,30 போன்ற தேதிகளில் பிறந்தவர்கள் இப்பெயரை அமைத்துக் கொண்டால், நல்ல பலனைக் கொடுக்காது. மற்றைய தேதியில் பிறந்தவர்கள், இந்த எண்ணைப் பெயராகக் கொண்டால் மிக மேன்மையடையலாம்.

(தொடரும்)

# — தமிழக உள்ளாட்சி தேர்தலில் — அனைத்துக்கட்சிகளும் தனித்து போட்டி





சமத்துவ மக்கள் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி ஆகியவை இடம் பெற்றிருந்தன. மாநகராட்சி மேயர் பதவிக்கு அ.தி.மு.க தன்னிச் சையாக தனது கட்சி வேட்பாளர்களை அறிவித்து கூட்டணிக் கட்சியினரிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

தே.மு.தி.க இரண்டு மாநகராட்சி மேயர் பதவிகளையாவது தங்களுக்கு வழங்க வேண் டும் என கோரியிருந்தது. தற்போது ஒரு மேயர் பதவி கூட கிடைக்காத நிலை ஏற்பட் டுள்ளது. இதை தே.மு.தி.க ஏற்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. கம்புன்னிஸ்ட் கட்சியினரும் மேயர் பதவியை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்துள்ளனர். எனவே அ.தி. மு.க கூட்டணியும் சிதறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் பல ஆண்டுகளுக்குப்பின் முதன்முறையாக வரும் உள்ளாட்சி தேர்தலில் பெரும்பாலான அரசியல் கட்சிகள் தனித்து போட்டியிடுகின்றன. இதனால் பலமுனைப் போட்டி ஏற்படும் சூழல் உருவாகி உள்ளது. அரசியல் அரங்கில் ஏற்பட்டுள்ள இந்த புதிய காட்சி காரணமாக தமிழக கட்சிகளின் உண்மையான பலம் என்ன என்பது தேர்தல் முடிந்ததும் தெரிந்து விடும்.

வழக்கமாக உள்ளாட்சி தேர்தலின் போது சட்டசபை தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சி கூட்டணி அப்படியே இருக்கும். ஆனால் இம்முறை தலைகீழ் மாற்றமாக உள்ளது. கடந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க கூட்டணியில் தி.மு.க -காங்கிரஸ், பா.ம.க விடுதலைச் சிறுத்தைகள் இடம் பெற்றிருந்தன. அந்த கூட்டணியில் சட்டசபை தேர்தலோடு காணாமல் போய் விட்டது. வரும் உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க -காங்கிரஸ் பா.ம.க - ம.தி.மு.க ஆகிய கட்சிகள் தனித்து போட்டியிட போவதாக அறிவித்துள்ளன. விடுதலைச் சிறுத்தைகள் இன்னமும் முடிவை அறிவிக்கவில்லை. அவர்களை தங்களுடன் இணையும்படி பா.ம.க விடுத்துள்ள அந்த அழைப்பை விடுதலைச் சிறுத்தைகள் ஏற்கவும் இல்லை நிராகரிக்கவுமில்லை.

அ.தி.மு.க கூட்டணியில் அ.தி.முக - தே.மு.தி.க -இந்திய கம்யூனிஸ்ட் ,மார்சிக்ஸ்ட் கம்யூனிஸ்ட், புதிய தமிழகம், அகில இந்திய

சட்டசபை தேர்தலின்போதும் கூட்டணி முடிவாவதற்கு முன்பாகவே வேட்பாளர் பட்டியலை அ.தி.மு.க வெளியிட்டது கூட்டணிக் கட்சியினருக்கு அதிர்ச்சி அளித்தது. சட்ட சபை தேர்தலில் வேட்பாளர்களை அறிவித்தது போல் தற்போது மேயர் வேட்பாளர்களை அ.தி.மு.க அறிவித்துள்ளது. அப்போது தி.மு.க வை வீழ்த்த வேண்டும் என்பதற்காக கூட்டணிக் கட்சிகள் அமைதியாக இருந்தன. தற்போது உள்ளாட்சி தேர்தலில் யாரும் யாரையும் நம்பவேண்டிய சூழல் இல்லாததால் ஒவ்வொரு கட்சியும் தனித்தனியே முடிவெடுக்க உள்ளன.

அ.தி.மு.க கூட்டணிக் கட்சிகளும் தனித்து போட்டியிட்டால் பன்முனைப் போட்டி ஏற்படும். இக்கட்சிகளுடன் காங்கிரஸ் பா.ஜ. போன்ற கட்சிகளும் தனித்து களம் இறங்குவதால் சட்டசபை, லோக்சபா தேர்தலை விட உள்ளாட்சி தேர்தலில் அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

அனைத்து கட்சிகளும் தனித்து போட்டியிடும்போது அக்கட்சிகளுக்கு மக்களிடையே உள்ள செல்வாக்கு, உண்மை நிலவரம் தெரியவரும். எனவே வெற்றிக்கு அனைத்துக் கட்சிகளும் கடுமையாக உழைக்கும் என்பதால் மக்கள் பலத்த எதிர்பார்ப்பில் உள்ளனர்.

தமிழகத்தில் கடந்த பல ஆண்டுகளாகவே எந்த கட்சியும் எந்த தேர்தலையும் தனித்து சந்தித்ததே கிடையாது. ஏதாவது ஒரு கூட்டணியில் இடம்பெற்று ஒரு சில தொகுதிகளில் மட்டும் போட்டியிட்டன. இதனால் தமிழகத்தில் எந்தெந்த கட்சிக்கு எவ்வளவு செல்வாக்கு உள்ளது என்பது தெரியாமலேயே இருந்தது. இப்போது முதல்முறையாக எல்லா கட்சிகளும் தனித்து போட்டியிட உள்ளதால் கட்சிகளின் உண்மையான பலம் தெரியவரும். அடுத்த தேர்தல்களில் கூட்டணி பேரத்திற்கு இந்த பலம் உதவும்.

(ஶ்ரீ-2)

## ஆக்ராவில் குண்டுவெடிப்பு
## — ஆறு பேர் காயம் —

(ஆக்ரா)


உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள ஆக்ராவில் குண்டு வெடித்து 6 பேர் காயம் அடைந்துள்ளனர்.

ஆக்ராவில் 70 படுக்கைகள் கொண்ட தனியார் வைத்தியசாலையின் வரவேற்பறைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5.45மணிக்கு இச் சம்பவம் இடம்பெற்றது. அங்கு வைக்கப்பட்ட இரும்பு நாற்காலிகளுக்கு அடியில் இந்த குண்டு வைக்கப்பட்டிருந்தது. இது நாட்டு வெடிகுண்டு ரகமாகும்.

இதை பயங்கரவாதிகள் வைத்திருப்பார்களா அல்லது குற்றச் செயலில் ஈடுபடும் உள்ளூர் குற்றவாளிகள் வைத்திருப்பார்களா என்று பொலிஸார் விசாரித்து வருகின்றனர். காயம் அடைந்தவர்களுக்கு வைத்தியசாலையிலேயே சிகிச்சை தரப்பட்டது.

சம்பவம் சிறிதாக இருந்தாலும் தேசிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த கமாண்டோ வீரர்களும் தடயவியல் துறையினரும் அங்கு விரைந்துள்ளனர். (ஶ்ரீ-2)

## தே.மு.தி.க.-காங்கிரஸ் கூட்டணியில் மூன்றாவது அணி உருவாகுமா?



பத்து மாநகராட்சியின் வேட்பாளர் பட்டியலை அ.தி.மு.க அதிரடியாக அறிவித்தது தே.மு.தி.க வுக்கு கடும் அதிருப்தியை உருவாக்கியுள்ளது. மதியாத வாசலை மிதிக்க வேண்டாம் என தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் தனது அதிருப்தியை வெளியிட்டதாகவும் அதற்கு கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. தொடர்ந்தும் பேசுவோம் என அவைத் தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் சமரசப்படுத்தியதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


இற்கிடையே தி.மு.க தனித்து போட்டியிடும் என அறிவித்துள்ளதால் அக்கூட்டணியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள காங்கிரசும் அதிருப்தியில் இருக்கிற தே.மு.தி.கவும் புதிய கூட்டணியை உருவாக்குமா? என்ற கேள்வியும் அரசியல் வட்டாரத்தில் எழுந்துள்ளது.

உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க தனித்து போட்டியிடுகிறது. தி.மு.க கூட்டணியில் இடம்பெற்ற காங்கிரஸ் தனித்து போட்டியிடலாமா அல்லது தனது தலைமையில் மூன்றாவது அணி அமைக்கலாமா என்பது குறித்தும் தீவிரமாக ஆலோசித்து வருகிறது. பா.ம.க, ம.தி.மு.க, பா.ஜ ஆகிய கட்சிகளும் தனித்துப் போட்டி யிடும் மனநிலையில் இருக்கின்றன. இந்நிலையில் ஆளும்கட்சி சார்பில் போட்டியிடும் பத்து மாநகராட்சிகளின் மேயர் வேட்பாளர்களின் பட்டியலை அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு தே.மு.தி.கவுக்கு கடும் அதிருப்தியை உருவாக்கியுள்ளது.

எதிர்க்கட்சியாக இருக்கிற எங்களிடம் இடபங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தாமல் அ.தி.மு.க தன்னிச்சையாக மாநகராட்சி வேட்பா ளர்கள் பட்டியலை அறிவித்தது நியாயமா? எங்களை மதிக்காதவர்களை நாங்கள் தேடி செல்ல மாட்டோம். மதியாத வாசலை மிதிக்க வேண்டாம் என எதிர்க்கட்சித்தலைவர் விஜயகாந்த் தனது கட்சியினரிடம் ஆவேசமாக கேட்டுள்ளதாகவும் அப்போது அவைத் தலைவர் பண்ரூட்டி ராமச்சந்திரன் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டாம் என கூறி சமாதானப்படுத்தியதாகவும் கூறப்பட்டுள்ளது.

தே.மு.தி.க எம்.எல்.ஏ க்கள் அனைவரும் உள்ளாட்சித் தேர்தலை அ.தி.மு.க வுடன் கூட்டிணி வேண்டாம் என்ற கருத்தை தெரிவித்துள்ளதாகவும் ஆனால் கூட்டணியில் நீடிக்க வேண்டும் என்று கட்சியினர் வலியுறுத்தி வருவதாகவும் நம்ப தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஶ்ரீ-2)

## பாரதச் செய்திகள்



## நல்லெண்ணத்தின் அடிப்படையில் மோடிக்கு அ.தி.மு.க. ஆதரவு
## ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

அ.தி.மு.க கொள்கையும் நரேந்திர மோடியின் கொள்கையும் ஒன்றாக இருக்கிறது. அதனால்தான் மோடியின் உண்ணாவிரதத்திற்கு அ.தி.மு.க ஆதரவு அளிக்கிறது என தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறினார்.

சென்னையில் அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு முதல்வர் ஜெயலலிதா அளித்த பேட்டியில்,நரேந்திர மோடியின் உண்ணாவிரதத்தை பற்றி உங்கள் கருத்து ? மோடியின் உண்ணாவிரத்தை அ.தி.மு.க ஆதரிப்பது ஏன்? நரேந்திர மோடி அமைதி ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கம் ஆகியவற்றுக்காக உண்ணாவிரதம் அறிவித்துள்ளார். அவரது நிலைப்பாடு எங்களது கொள்கையை ஒட்டியே இருக்கிறது. மத சார்பற்ற நிலை, சமூக ஒற்றுமை, அமைதி ஆகியவை தான் எங்களது கொள்கையாக இருக்கிறது. மோடி என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு உண்ணாவிரதத்திற்கு யாரையாவது அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி அ.தி.மு.க எம்.பிக்கள் மைத்ரேயன் மற்றும் தம்பிதுரை



உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்.

இது அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துமா? அப்படி கருத முடியாது. நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் விதத்தில்தான் மோடியின் உண்ணாவிரதத்திற்கு அ.தி.மு.க ஆதரவு அளிக்கிறது. இதில் தவறு இல்லை. வரும் பாராளுமன்ற தேர்தலில் நரேந்திர மோடி பிரதமர் வேட்பாளராக போட்டியிட்டால் அவருக்கு ஆதரவு அளிப்பீர்களா? யூகத்தின் அடிப்படையிலான இக்கேள்விக்கு தற்போது பதிலளிக்க முடியாது. அதுபோன்ற நிலை ஏற்படும் போது பதிலளிக்கிறேன்.

(ஶ்ரீ-2)

## ஊழலை அம்பலப்படுத்துவோரை பாதுகாக்க சட்டம் தேவை
## அத்வானி தெரிவிப்பு

(புதுடில்லி)

ஊழல்களை அம்பலப்படுத்துவோரை அரசு பாதுகாக்க வேண்டும். அதற்காக சட்டம் இயற்றப்பட வேண்டும். என்று பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் அத்வானி வலியுறுத்தியுள்ளார்.

தமது இணையத்தளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அரசின் திட்டங்களில் நடந்த ஊழல்களை அம்பலப்படுத்திய ஐ.ஓ.சி ஊழியர் மஞ்சுநாத் சண்முகம், தேசிய நெடுஞ்சாலையில் நடந்த ஊழலை வெளிப்படுத்தும் இளம் பொறியாளர் சத்யேந்திர துபே ஆகியோர் ஊழல்வாதிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இப்படி நேராமல் இருக்க ஊழல்களை அம்பலப்படுத்துவோரை சட்ட ரீதியாகவே பாதுகாக்க ஏற்பாடுகள் தேவை.

2008 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மக்களவையில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பின்போது அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க பாரதிய ஜனதாவின் பகன் சிங் குலஸ்தே, மகாவீர் பகோடா, அர்கல் ஆகியோருக்கு ஆளும் கூட்டணி சார்பில் வலை விரிக்கப்பட்டது. அவர்களுடைய வாக்குகளுக்கு விலை பேசப்பட்டது.

தங்களை இப்படி அணுகுகிறார்கள் என்று எங்களிடம் தாங்களாகவே தெரிவித்தனர்.

இந்தச்சதியை அம்பலப்படுத்தவேண்டும் என்பதற்காக அவர்களைத் தொடர்ந்தும் இலஞ்சம் தர முன்வந்தவர்களுடன் பேசி அவர்களுடைய பேரம் என்ன என்று அறியுமாறு கூறினோம். அப்படி அவர்கள் பணம் கொடுத்தபோது அதை கையும் மெய்யுமாக நிரூபிக்க மக்களவையிலேயே அதைக் கொண்டு போய்க் காட்டினோம். அதை நாடகம் என்றும் நம்பத்தக்கதல்ல என்றும் கூறி அப்போது நிராகரித்தார்கள். (ஶ்ரீ-2)

# முன்னாள் போராளிகள் அனைவரையும் இம்மாத இறுதிக்குள் சமூகமயப்படுத்துவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் அனைவரையும் இந்த மாத இறுதிக்குள் சமூகமயப்படுத்தப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாதுகாப்பு தரப்பினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்கள் கட்டம் கட்டமாக உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய தற்போது சுமார் இரண்டாயிரத்து 700 முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு நிலையங்களில் தங்கியுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் கஜதீர தெரிவித்துள்ளார்.

இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளதாக குறிக்கும் வகையில், சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, முன்னாள் போராளிகளுக்கு அவர்களது தம்பி தங்கைகளை சந்திப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

புனர்வாழ்வு நிலையங்களில் தங்கியுள்ள தமிழீழ புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களை சந்திப்பதற்காக அவர்களது பெற்றோர் அவ்வப்போது வந்து சென்றாலும் அவர்களது தம்பி தங்கைகளை சந்திப்பதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதனைக் கருத்திற்கொண்டு முன்னாள் போராளிகள் அவர்களது சகோதரர்களுடன் பல்வேறு களியாட்ட நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# இலங்கையும் இந்தியாவும் பாரிய கடற்படை ஒத்திகை

(கொழும்பு)

இந்தியாவும் இலங்கையும் பாரிய கடற்படை ஒத்திகை ஒன்றை நடத்தவுள்ளன.

புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும் இராணுவ ஒத்துழைப்பின் ஒரு கட்டமாகவே இது மேற்கொள்ளப்படவுள்ளது.

***சிலிநெக்ஸ்*** என்று பெயரிடப்பட்ட இந்த ஒத்திகை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. இரண்டு நாடுகளின் நான்கு போர்க்கப்பல்கள் இந்த ஒத்திகையில் இடம்பெறவுள்ளன.

இந்தியா கடந்த பல ஆண்டுகளாக இலங்கையின் நூற்றுக்கணக்கான கடற்படை வீரர்களுக்கு மகாராஸ்டிரா மாநில மிஸோரமில் உள்ள எறிகணைத் தளத்தில் பயிற்சிகளை வழங்கியுள்ளது.

அத்துடன் நீர்மூழ்கி கப்பல்களுக்கு எதிரான தாக்குதல் பயிற்சிகளையும் வழங்கியுள்ளது.

அத்துடன் புலனாய்வு தகவல்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது ஆயுதங்களை வழங்கியமை உட்பட பல உதவிகளையும் இந்தியா, இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இந்தநிலையில் இந்தியாவின் டெஹ்ராடம் இராணுவ கல்லூரியில் நூற்றுக்கணக்கான இலங்கை கடற்படையினர் பயிற்சிகளை பெற்று வருகின்றனர்.

(ஸ்ரீ-2)

# இரு அரசசார்பற்ற நிறுவனங்கள் ஐ.நா. செயலாளரை பிழையாக வழிநடத்தியுள்ளன

## சிங்கள ஊடகம் தெரிவிப்பு

இரண்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் நாயகத்தை பிழையாக வழிநடத்தியுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அனைத்துலக மன்னிப்புச் சபை மற்றும் இன்டர்நஷனல் க்ரைஸீஸ் குரூப் ஆகிய இரண்டு அமைப்புக்களுமே இவ்வாறு பான் கீ மூனை பிழையாக வழிநடத்தியுள்ளன.

இலங்கைக்கு எதிரான அனைத்துலக மன்னிப்புச் சபை 69 பக்க அறிக்கை ஒன்றையும் இன்டர்நஷனல் க்ரைஸீஸ் குரூப் 8 பக்க அறிக்கை ஒன்றையும் பான் கீ மூனிடம் ஒப்படைத்துள்ளன.

போர். இடம்பெற்ற காலத்தில் வன்னியில் சேவையாற்றி 21 அரசசார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றிய நூற்றுக்கணக்கான விடுதலைப் புலி ஆதரவாளர்களிடம் அனைத்துலக மன்னிப்புச் சபை ஆதாரங்களை திரட்டியுள்ளது.

வன்னிப் போர் தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக ஐக்கிய நாடுகளினால் நியமிக்கப்பட்டுள்ள தொராயா ஒபேட் அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றியவர் என தெரிவிக்கப்படுகிறது.

மகளிர் பிரச்சினைகள் தொடர்பில் செயற்பட்டு வந்த இவர் முதல் தடவையாக போர் தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

# துணுக்காய் வலய பாடசாலைகளில் கடமையாற்றுவோருக்கு...

(மல்லாவி)

கடந்த 01.01.2007 ஆம் திகதிக்கு முன் நியமனம் பெற்று இதுவரை வடமாகாண பொதுச்சேவைக்கு உள்ளீர்ப்புக் கடிதம் கிடைக்கப் பெறாத துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பப்படிவத்தினை பார்வையிட்டு 3 பிரதிகளைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் அறிவித்துள்ளார்.

அத்தோடு இக்கடிதம் பதவியை உறுதிப்படுத்தல், சேவைநீடிப்பு, ஓய்வூதியம் போன்ற நடவடிக்கைகளுக்கு மிக அவசியமாகவுள்ளதனால் இவ்விடயத்தை முன்னுரிமைப்படுத்தி அனுப்பி வைக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-12-15)



சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்தினரின் அரையாண்டுப் பொதுக்கூட்டத்தில் இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையின் இளைப்பாறிய முகாமையாளர் நவரட்ணம் கௌரவிக்கப்பட்டார். அவருக்கு மன்றச் செயலாளர், தலைவர், பொருளாளர் இணைந்து நினைவுப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:- சாவகச்சேரி நிருபர்)*

# 2011.09 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ *1658*-யாழ்ப்பாணத்தில் ரோமன் கத்தோலிக்க மதகுருமாரை மறைத்து வைத்திருப்பது மரணதண்டனைக்குரிய குற்றமாக டச்சு அரசால் அறிவிக்கப்பட்டது.

★ *1893*-சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோவில் உலக சமய மாநாட்டில் உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார்.

★ *1893*-நியூசிலாந்து பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதலாவது நாடானது.

★ *1942*-மேற்கு உக்ரைனில் புரோடி என்ற இடத்தில் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 500 யூதர்கள் நாசி வதைமுகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

★ *1944*-பின்லாந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.

★ *1952*-ஐக்கிய அமெரிக்கா சார்லி சப்ளின் இங்கிலாந்து சென்று விட்டுத் அமெரிக்கா திரும்புவதற்குத் தடைவிதித்தது.

★ *1957*-ஐக்கிய அமெரிக்கா நிலத்துக்கடியே தனது முதலாவது அணுகுண்டுச் சோதனையை நடத்தியது.

★ *1983*-சென் கிட்ஸ் மற்றும் நெவிஸ் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

### பிறப்புக்கள்

★ *1911*-வில்லியம் கோல்டிங், இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய நாவலாசிரியர் *(இ.1993)*

★ *1965*-சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளி வீராங்கனை

### இறப்பு

★ *1881*-ஜேம்ஸ் கார்ஃபீல்ட், ஐக்கிய அமெரிக்காவின் 20 ஆவது குடியரசுத் தலைவர் *(பி.1831)*

### சிறப்பு நாள்

★ சென் கிட்ஸ் மற்றும் நெவிஸ்-சுதந்திரதினம் *(1983)*



★ *1980*-நாதக் கலைஞர் கே.பி. சுந்தராம்பாளின் நினைவு தினம் இன்றாகும். *(பி.1908)*

# லிபியாவின் இடைக்கால அரசுக்கு ஐக்கிய நாடுகள் சபை அங்கீகாரம்

லிபியாவின் இடைக்கால அரசுக்கு ஐ.நா. அங்கீகாரம் அளித்துள்ளது. லிபியாவுக்கு எதிரான பொருளாதார மற்றும் இராணுவ ரீதியான தடைகளை களைய இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் போரால் சீரழிந்த லிபியா பொருளாதார மற்றும் அரசியல் ஒழுங்கில் மீண்டும் வர முடியும்.

இதற்காக ஐ.நா.பாதுகாப்பு குழுவில் 2009 ஆம் ஆண்டு தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.லிபிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, மனித உரிமைகளைத் காப்பது, ஜனநாயக அரசை உருவாக்குவது ஆகியவற்றுக்கான ஐ.நா.வின் புதிய முயற்சிகளை பாதுகாப்பு குழு முழுமையாக அங்கீகரித்தது.

193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுக்குழுவில் கடாபி அரசை வீழ்த்திய லிபிய இடைக்கால அரசுக்கு ஐ.நா.வில் இடம் அளிப்பதற்கு ஆதரவாக 114 வாக்குகள் கிடைத்தன. எதிராக 17 வாக்குகள் கிடைத்தன. இந்தியா இடைக்கால அரசுக்கு ஆதரவாக வாக்களித்து இந்த வாக்கெடுப்பு முடிந்த சில மணி நேரங்களில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனை வரவேற்றுள்ள அமெரிக்கா, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நடவடிக்கைக்காக லிபிய மக்களைப் பாராட்டுவதாக தெரிவித்துள்ளது. பிரிட்டனும் இந்த நடவடிக்கையை வரவேற்றுள்ளது.


அதேநேரத்தில் சர்வதேச நிதியம், உலக வங்கி ஆகியன லிபிய அதிகாரிகளுடன் ஒத்துழைத்து நாட்டின் பொதுநிதி மேலாண்மையை சீர்ப்படுத்த உதவ வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.எனினும் லிபியாவின் சில பகுதிகளில் தொடர்ந்து சண்டை இடம் பெற்று வருவதால் தங்கள் படைகளைப் பயன்படுத்துவதற்கு நேசப்படைகளுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது.


லிபியாவில் உள்ள அனைத்து மக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்கும் விதத்தில் இடைக்கால அரசில் இடம்பெறுவோர் பெயர்கள் அறிவிக்கப்படவுள்ளது.

30 உறுப்பினர்கள் கொண்ட இந்த அரசில் அனைத்து அரசியல் குழுக்கள், அனைத்துப் பிரதேசங்கள், பெண்கள் உள்ளிட்ட எல்லா தரப்பினரும் இடம் பெறுவர் என்று இரண்டு உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். லிபியா முழுமையாக விடுதலை பெற்ற பின் புதிய அரசு அமையும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதனிடையே லிபிய தலைநகர் டிரிபோலியிலிருந்து 140 கி.மீ தள்ளியுள்ள மலைப்பகுதியான பானி வாலிட் பகுதியில் கடாபி ஆதரவாளர்களுக்கும் புரட்சியாளர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. கடுமையான மோதலின் முடிவில் புரட்சிப் படையினர் மலைப்பகுதியிலிருந்து பின்வாங்க வேண்டியதாயிற்று. (ஸ்ரீ-2)

# ஒபாமா சந்திக்க மறுத்ததால் கிலானியின் அமெ.பயணம் இரத்து





(இஸ்லாமாபாத்)

ஜனாதிபதி பராக் ஒபாமா சந்தித்துப் பேச முடியாது என்று கூறியதால் தான் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸாகிலானி தனது அமெரிக்கப் பயணத்தை இரத்து செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

ஐ.நா.பொதுச்சபைக்கூட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் செல்லவிருந்த கிலானியையும் ஜனாதிபதி ஒபாமாவையும் தனிப்பட்ட முறையில் சந்தித்துப்பேச வைக்க பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் தீவிர முயற்சி எடுத்தனர். ஆனால் அந்த முயற்சி தோல்வியைத் தழுவியது. இதனால் அதிருப்தி அடைந்த கிலானி தனது அமெரிக்கப் பயணத்தை இரத்து செய்துவிட்டார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான பாகிஸ்தானின் நடவடிக்கையில் அமெரிக்காவுக்கு திருப்தி இல்லை. இதனால் இரு நாட்டு உறவிலும் விரிசல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கிலானியை சந்தித்துப் பேச ஒபாமா மறுத்துள்ளது இரு நாட்டு உறவிலான விரிசல் பெரிதாகியுள்ளதையே காட்டுகின்றது.

முன்னதாக பாகிஸ்தானில் வெள்ளம் பாதித்த பகுதியில் நிவாரண நடவடிக்கையை கிலானி நேரில் கண்காணிக்க விரும்புவதால்தான் அமெரிக்கப் பயணம் இரத்து செய்யப்படுவதாக அவரது அலுவலக தரப்பில் கடந்த வெள்ளிக்கிழமை அறிவிப்பு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)




# 50 ஆவது பிறந்தநாளை கொண்டாடிய தலை ஒட்டிப் பிறந்த சகோதர-சகோதரி



டாக்டர்களின் ஊகங்களை முறியடித்து தலை ஒட்டிப் பிறந்த ஆண், பெண் இரட்டையர்கள் தங்கள் 50 ஆவது பிறந்தநாளை சமீபத்தில் கொண்டாடினர். ஜோர்ஜ் மற்றும் லோரி சேப்பல் என்ற ஆண், பெண் குழந்தைகள் இருவரும் 50 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் பிறந்தனர்.

பிறக்கும் போதே இருவரது தலையும் ஒட்டியபடியே இருந்தது. அத்தோடு தலையின் முக்கிய நரம்புகளும் மூளையில் 30 சதவீதமும் இருவருக்கும் பொதுவாக இருந்தன.


இதனால் மருத்துவ வசதிகள் அதிகமாக முன்னேறாத அக்காலத்தில் இந்த விசித்திரமான பிறவிகள், நீண்டநாள் வாழ முடியாது என டாக்டர்கள் கைவிரித்து விட்டனர். ஆனால் டாக்டர்களின் ஊகங்களை முறியடித்து இவர்கள் தற்போது தங்களது 50 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடியுள்ளனர்.

இந்தக் கொண்டாட்டத்தை லண்டனில் நிகழ்த்தியுள்ள இவர்களில் லோரி ஐந்தடி ஒரு அங்குல உயரமும் ஜோர்ஜ் நான்கடி 4 அங்குல உயரமும் கொண்டவர்களாக தற்போது உள்ளனர்.

ஜோர்ஜ் மேற்கத்தைய இசைப் பாடகராக திகழ்கிறார்.லோரி டென் பின்பவுலிங் என்ற விளையாட்டில் சம்பியன் பட்டம் பெற்றுள்ளார்.

வாழ நினைத்தால் வாழலாம் என்ற பழமொழிக்கு இலக்கணமாக இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.தங்களது வாழ்க்கை குறித்து டெய்லி மெயில் பத்திரிகைக்கு லோரி அளித்த பேட்டி ஒன்றில், நாங்கள் பிறந்த போது எங்களது வாழ்க்கை மிஞ்சிப் போனால் 30 ஆண்டுகளைத் தாண்டாது என்று கூறினார்.

ஆனால் அவர்களின் ஊகங்கள் தவறு என்று நாங்கள் நிரூபித்து விட்டோம். கடந்த 50 ஆண்டுகாலம் நாங்கள் நிறையக் கற்றுக் கொண்டோம். எங்கள் வாழ்க்கையை முழுதாக வாழ்ந்து முடிப்போம் என்று பெருமிதத்துடன் கூறினார். (ஸ்ரீ-2)



வியட்நாம் தலைநகர் ஹநோய்க்கு சென்ற இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை (இடது), அந்நாட்டு ஜனாதிபதி ட்ருவாங்டன் சங் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# நேட்டோ படையினரின் தாக்குதலில் 18 தலிபான்கள் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேட்டோ படையினர் நடத்திய வான் தாக்குதலில் 18 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் பர்காய்மெட்டால் மாவட்டத்தின் லோகால் பகுதியில் பயங்கரவாதிகளின் நடமாட்டம் இருப்பதாக சர்வதேச பாதுகாப்பு படையினருக்கும் நேட்டோ படையினருக்கும் இரகசிய தகவல் கிடைத்தது. இதன்பேரில் நேட்டோ படையினர் இப்பகுதி மீது திடீர் வான் தாக்குதல் நடத்தினர்.

இதில் 18 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.இந்த தாக்குதலில் அப்பாவி மக்கள் யாரும் பலியாகவில்லை என அம்மாவட்ட பொலிஸ் அதிகாரி ஜாஹித்நௌரிஸ்தானி கூறினார்.

கொல்லப்பட்டவர்கள் அனைவரும் தலிபான்கள் என தலிபான்கள் அமைப்பின் செய்தி தொடர்பாளர் ஜபிபுல்லா மஜாகிதி என உறுதி செய்துள்ளார். (ஸ்ரீ-2)

# நேபாளத்தில் நிலச்சரிவில் சிக்கி ஏழு பேர் உயிரிழப்பு

(காத்மண்டு)

நேபாளத் தலைநகர் காத்மண்டு அருகே நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர்.19 பேர் காயம் அடைந்தனர்.

உயிரிழந்தவர்களில வயதானோர் இருவரும் 5 வயதுச் சிறுமியும் அடங்குவர். ரோல்கா மாவட்டம் மிஜ்ஜிங் கிராமத்தில் ஏற்பட்ட இந்த நிலச்சரிவில் அங்கிருந்த 8 வீடுகள் மற்றும் கடைகள் ஆகியவை தரைமட்டமாகின. ரூ.5.கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து அறிந்த இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் அப்பகுதியை சேர்ந்த சமூக ஆர்வலர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

காயமடைந்த அனைவரும் அப் பகுதியில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)



ஈரான் தலைநகர் தெஹ்ரானில் அந்நாட்டு ஜனாதிபதி முகமது அகமது நிஜாத்தை (இடது) அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் அந்நாட்டு எட்வர்ட் நல்பாண்டியன் சந்தித்து உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# நாடாளுமன்ற தெரிவுக்குழுவை உருவாக்கும் யோசனைத்திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு யோசனைத் திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொனறு செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினை உருவாக்குவதற்காக சபாநாயகர் கட்சித்தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் இந்தச் செய்திகளில் உண்மையில்லை என நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க கித்துலேகொட தெரிவித்துள்ளார்.

பிரதிகளை பெயரிடுமாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ,கட்சித் தலைவர்களுக்கு அறிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இவ்வாறான எந்தவொரு அழைப்பும் கிடைக்கவில்லை என கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் இவ்வாறு அழைப்பு கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளன.

அண்மையில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பதில் அரசாங்கப் பேச்சாளர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன, நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிநிதிகளை நியமிக்குமாறு கோரி சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு யோசனைத் திட்டமும் ஓர் காலத்தை கடத்தும் முயற்சியா என அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஸ்ரீ-2)

# மாலுசந்தி உடுப்பிட்டி வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(கரவெட்டி)

மாலுசந்தி உடுப்பிட்டி வீதி சேதமடைந்து காணப்படுவதால் மக்கள் போக்குவரத்து செல்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

மேற்படி வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

அத்தோடு இவ்வீதி வடமராட்சியின் பிரதான வீதி என்பதும் பல ஆயிரக்கணக்கான பயணிகளும் பல நூற்றுக்கணக்கான வாகனங்களும் பயணம் செய்யும் வீதியாகவும் உள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு இவ் வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

(ஸ்ரீ-12-24)

# வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்

(கரவெட்டி)

அதிவேகமாக பயணித்த இரு வாகனங்கள் விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்ததுடன் வாகனம் பலத்த சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் கரணவாய் மூத்த விநாயகர் வீதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,யாழ்ப்பாணத்திலிருந்து வாகனத்தை திருத்த வேலை செய்துவிட்டு வடமராட்சி நோக்கி வந்த தனியார் பேருந்தும் சிறிய ரக ஹன்டர் வாகனமொன்றும் போட்டி போட்டு பயணித்ததில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஒன்றோடொன்று மோதியுள்ளது.

இதில் பேருந்து பலத்த சேதமடைந்ததுடன் ஹன்டர் வாக னத்தில் சென்ற ஒருவர் காயமடைந்துள்ளார். இச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண் டுள்ளனர். (ஸ்ரீ-12-24)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்







நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு வேலணை பிரதேசசபைக்கும், ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கும் தலைவர்களாக தெரிவான எம் மண்ணின் மைந்தர்களான
**திரு சின்னையா சிவராசா (போல் தோழர்)** அவர்களையும்
**திரு மருதையினார் ஜெயகாந்தன்** அவர்களையும்
வாழ்த்துவதோடு **அதிமேதகு ஜனாதிபதி** அவர்களுக்கும்
மாண்புமிகு அமைச்சர் பாரம் பரிய கைத்தொழில்கள், சிறுதொழில் அமைச்சர் **டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும்
எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்,**
**சரவணை ஸ்ரீ செல்வக் கதிர்காமம்.**

(6173)


# மட்டக்களப்பு லீக் அணியை தோற்கடித்து பருத்தித்துறை லீக் அணி வெற்றி



(கரவெட்டி)

மட்டக்களப்பு லீக் அணியை வெற்றி பெற்று பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி 2 ஆவது சுற்றுப் போட்டியில் வவுனியா லீக் அணியுடன் மோதுவதற்கு தகுதி பெற்றுள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தில் அங்கம் வகிக்கும் 48 லீக் அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டபோட்டி ஒன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணிக்கு வடமராட்சி கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

ஆட்டம் ஆரம்பமாகியது முதல் இடைவேளைவரை மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப் போட்டியில் 1 இற்கு பூச்சியம் என்ற கோல் கணக்கில் மட்டக்களப்பு லீக் அணி முன்னணி வகித்தது.

இதில் மட்டக்களப்பு லீக் அணி வீரர் பாருவ் தனது அணிக்காக கோலொன்றை பெற்றுக் கொடுத்தார். இரண்டாவது பாதி ஆட்டத்தில் பருத்தித்துறை லீக் அணியினர் அடுத்தடுத்து கோல்மழை பொழிந்தனர்.

இதில் 5 ஆவது நிமிடத்தில் சாரங்கனும் 11, 19 ஆவது நிமிடங்களில் கியூட்பஸில் ராஜா அடுத்தடுத்து 2 கோல்களையும் 39 ஆவது நிமிடத்தில் அன்ரனி அமலராஜ்யும் தமது அணிக்காக கோல்களை போட்டு தமது அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றனர்.இதில் மட்டக்களப்பு லீக் அணி சார்பாக பசார்தீன் மேலுமொரு கோலைப் போட்டார். பருத்தித்துறை லீக் அணி 2 இற்கு 4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஸ்ரீ-12-24)

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 500 ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு 683 ஆவது படைப்பிரிவினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்த் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இக்கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட உடையார்கட்டு மகாவித்தியாலயம்,குரவில்தமிழ் வித்தியாலயம், இருட்டு மடு தமிழ் வித்தியாலயம், சுதந்திரபுர அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்களுக்கே இக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். (4-3)

# அநுராதபுரத்தில் விபத்து; ஒருவர் பலியானார்

அநுராதபுரத்தில் நேற்று அதிகாலை லொறியொன்றின் மீது புகையிரதம் மோதியதால் லொறியின் சாரதி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே.வள்ளிபுரம்(வயது 64) என்பவரே உயிரிழந்ததாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரஜரட்டன ரெஜின எனும் புகையிரதம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற லொறியுடன் மோதியுள்ளது. மேற்படி லொறியானது பாதுகாப்புக் கடவையை மீறி புகையிரதப் பாதையைக் கடக்க முற்பட்ட போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அநுராதபுரம் மதவாச்சி வீதியிலுள்ள ஹத ரஸ்கல்ல எனும் இடத்தில் இவ்விபத்து இடம்பெற்றது. லொறியின் உதவியாளர் லொறியிலிருந்து பாய்ந்து காயமடைந்த நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

குருநாகல் அளவ்வயில் நேற்றுமுன்தினம் புகையிரதங்கள் மோதிக்கொண்டதால் ஐவர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# பெயர் மாற்றம் செய்ய விரும்புவோருக்கு

(மல்லாவி)

பொதுமக்கள் தங்களது பெயர்களை மாற்றம் செய்வதற்கு வேண்டிய ஆவணங்கள் பற்றிய தகவல்கள் முல்லை மாவட்ட மேலதிக பதிவாளர்களால் வழங்கப்பட்டுள்ளன.

இத்தகவல்களில் பிறப்புச் சான்றிதழில் தாய் அல்லது தந்தையினுடைய பெயரில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு தாய் தந்தையினுடைய பிறப்புச் சான்றிதழ் மற்றும் திருமணச் சான்றிதழ் போன்ற ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அச்சான்றிதழ்கள் 6 மாத காலத்திற்குள் எடுக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

ஒருவயது முதல் 18 வரையுள்ள வயதுப் பிரிவினர் பெயர் மாற்றம் செய்வதற்கு கிராமசேவையாளரின் கடிதம்,பாடசாலை அதிபரின் கடிதம், தேசிய அடையாள அட்டை அல்லது தபால் திணைக்கள ஆள் அடையாள அட்டை, குடும்பஅட்டை போன்றவற்றையும் பிள்ளையின் வளர்ச்சிப்பதிவேடு, வங்கிப்புத்தகம் அல்லது ஜாதகக் குறிப்பு போன்ற ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

18 வயதிற்கு மேற்பட்டவர்கள் பெயர் மாற்றம் செய்வதற்கு வேண்டுமாயின் தேசிய ஆள் அடையாள அட்டை, திருமண சான்றிதழ், வாக்காளர் இடாப்பு பதிவு அட்டை காணி உறுதி அல்லது குடும்பஅட்டை, வங்கிப்புத்தகம் போன்ற ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.இவை தவிர மேலதிக மாவட்ட பதிவாளரால் கோரப்படும் ஆவணங்களும் வழங்கப்பட வேண்டும்.

மேற்படி தரப்பட்ட தரவுகளை ஒப்படைக்கின்ற பொழுது தங்களுக்குரிய பதிவுகளை மிக விரைவாக பதிவு செய்து பெற்றுக் கொள்ள முடியும் என முல்லை மாவட்ட பதிவாளர் தெரிவித்துள்ளார். (4-12-15)

நம்முடைய நன்மையை நாம் அடையா விட்டாலும் பிறருடைய நன்மை இருக்கவே இருக்கிறது. அதனைச் செய்ய முயல்வோம். -ஜார்ஜ் எலியட்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இன்னும் துயிலுதியோ பள்ளி எழ மாட்டீரோ!

ஈழத் தமிழ் இனத்திற்கு ஆரோக்கியமான அரசியல் தலைமை கிடைக்கவில்லை என்பது மட்டுமே பெரும் குறைபாடு என்று யாரும் நினைத்து விடக் கூடாது.

மாறாக ஈழத் தமிழ் இனத்திற்கு தியாக உணர்வு கொண்ட புத்திஜீவிகளும் கிடைக்கவில்லை என்பதே நிஜம்.

இதைக் கூறும்போது அர்ப்பணிப்போடு செயற்பட்ட சில புத்திஜீவிகள் மனவருத்தம் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் உள்ளதாயினும் உண்மை நிலை, எங்களின் புத்திஜீவிகளும் சுயநலம் மிக்கவர்களாக இருந்தார்கள்-இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

உலக வரலாற்றை எடுத்து நோக்கும்போது இளைஞர்களை நோக்கி சோக்ரட்டீஸ் விடுத்த தர்க்க ரீதியான அழைப்பு முதல், இந்தியாவில் மிக அண்மையில் உண்ணாவிரதமிருந்த அன்னா ஹசாரே வரை புத்திஜீவிகளே தத்தம் நாடுகளின் அரசியல், நீதி, நிர்வாகம், கல்வி, பொருளாதாரம் ஆகியுவற்றை வளப்படுத்தியும், ஒழுங்குபடுத்தியும் செம்மைப்படுத்தியும் உள்ளனர் என்பதை கண்டறிய முடியும்.

ஆனால் எங்கள் மண்ணில் மட்டும் புத்திஜீவி என்பதற்கு வேறுவிதமான வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது.

அதாவது பிரச்சினை இல்லாமல் பயபக்தியுடன் வாழ்ந்து முடிப்பது மட்டுமே ஒரு சிறந்த புத்திஜீவிக்கு அழகு என்று கருதப்படுகின்றது.

இதன் காரணமாக எங்கள் இனம் இத்துணை உயிர்த் தியாகங்களைச் செய்தும் விடிவு பெற முடியாத இனமாகத் தவிக்கின்றது.

இப்போது கூட தமிழ் மக்கள் தங்களின் உரிமை விடயத்தில் என்ன நடைபெறுகின்றது என்பதை அறிய முடியாதவர்களாக இருக்கின்றனர்.

எங்கள் பிரச்சினைக்கு எது தீர்வு என்பதை உணரமுடியாத தமிழ் அரசியல் தலைமைகளின் பரிதாப நிலையை நினைக்க இதயம் சுக்கு நூறாகிறது.

இவ்வாறு எக்காலத்திலும் இல்லாத மிகக் குழப்பமான சூழ்நிலையில் தமிழ் மக்களின் அரசியல் களம் இருக்கும்போது,

தமிழ் அரசியல் தலைமைகளை அழைத்து இப்படித்தான் செயற்படுங்கள் என்று சொல்வதற்கு எங்களிடம் புத்திஜீவிகள் இல்லையா? அல்லது அறிவிலார்க்கு உரைப்பவர் அவரிலும் பேதை என்ற பழமொழிக்கு அமைவாகப் பேசாமல் இருக்கிறார்களா? எதுவுமே புரியாமல் உள்ளது.

எதுவாயினும் அன்பு மிகுந்த தமிழ்ப் புத்திஜீவிகளே! உங்களுக்குள் ஒன்றுபட்டு எங்கள் அரசியல் தலைமைகளை வழிப்படுத்துங்கள்.

இலங்கை அரசின் போர் வெற்றியை ஆட்சியாளர்களின் திறன் என்பதாக மட்டும் பார்க்காதீர்கள்.

அதற்குப் பின்னால் இருக்கக்கூடிய தென்பகுதி புத்திஜீவிகளின் வியூகங்கள், திட்ட முன்னெடுப்புகள், இராஜதந்திரோபாயங்கள் என்பனவற்றின் வலிமையை உணருங்கள்.

இன்னும் உறக்கம் வேண்டாம். எங்களுக்கு தரவருகிறது சர்வதேசம். அதை வேண்டத் தெரிந்தால் போதும்.

உதவுங்கள். இது எல்லாவற்றையும் போரில் பறிகொடுத்த தமிழ் இனத்தின் மன்றாட்டமான கோரிக்கை.

# மிருக பலியைத் தடுத்த மேர்வினுக்கு சாபம் ஏற்படாதிருக்க போதி பூஜை

(கொழும்பு)

பொதுமக்கள் உறவுகள், பொதுமக்கள் விவகார அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு ஆசீர்வாதம் கோரி நாடுமுழுவதும் 1500 போதி பூஜைகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னேஸ்வரம் சிறி பத்திரகாளி அம்மன் கோவிலில் நடைபெறவிருந்த மிருக பலி பூஜையை தடுப்பதற்கு அமைச்சர் மேர்வின் சில்வா தலையிட்டதால் அவருக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய சாபங்களை நீக்குவதற்காக இத்தகைய போதி பூஜைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதான பூஜை களனி விகாரையில் நேற்று மாலை நடைபெற்றது. அத்துடன் கம்பஹா மாவட்டத்தின் பல ஆலயங்களிலும் பூஜைகளையும் நடத்த ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தனது ஆதரவாளர்கள் இத்தகைய பூஜைகளை ஏற்பாடு செய்தமைகுறித்து தான் அறிந்திருப்ப தாக மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நான் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மிருகப் பலி பூஜைகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடவுள்ளேன். ஏனைய மதக் குருக்களிடமும் இது குறித்து பேசுவேன் என அவர் கூறினார்.

இதேவேளை முன்னேஸ்வரம் சிறிபத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து அகற்றப்பட்ட சுமார் 50 ஆடுகளும், சேவல்களும் தனியார் தோட்டமொன்றில் வைக்கப்பட்டுள்ளன.

இவை ஆலய தர்மகர்த்தாவிடம் ஒப்படைக்கப்படவிருந்தன. எனினும் தாம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதால் பொலிஸாரே இவ்விடயத்தில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தர்மகர்த்தா தெரிவித்துள்ளதால் இந் நிகழ்வு இடம்பெறவில்லை.

பலி கொடுக்கப்படவிருந்த மிருகங்கள் ட்ரக்டர் மூலம் அங்கிருந்து அகற்றப்பட்ட போது பொலிஸார் அதைத் தடுக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# வெட்டுக்காயப்பட்டவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வெட்டுக்காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சைப் பலனின்றி நேற்று உயிர் இழந்தார்.

இச்சம்பவத்தில் புன்னாலைக்கட்டுவன் ஈவினையைச் சேர்ந்த என்.ஜேந்திரா (வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறித்தநபர் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு வீட்டைவிட்டு வெளியேறியதாகவும் இரவு 7.30 மணியளவில் வெட்டுக்காயத்துடன் வீட்டுக்கு வந்தாகவும் உயிரிழந்தவரின் உறவினர் தெரிவித்தனர்.

அச்சந்தர்ப்பத்தில் அவரை அச்சுவேலி வைத்தியசாலைக்கு தாம் கொண்டு சென்றதாகவும் பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

இருப்பினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் உயிர் இழந்தார். இவரது சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-6)

# வவுனியாவில் டெங்கு ஒழிப்பு வாரம் கடைப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் டெங்கு அபாயம் அதிகரித்துள்ளமையால் வவுனியா மாவட்டத்திற்கும் டெங்கு பரவக்கூடிய சாத்தியக்கூறு காணப்படும் நிலையில் அங்கு டெங்கு ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்படுவதாக சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு வாரத்தையிட்டு வீட்டு உரிமையாளர்களும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்களும் துப்புரவு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிராம சேவகரை தலைமையாகக் கொண்ட டெங்கு ஒழிப்பு குழுக்கள் துப்புரவு செய்யவேண்டுமெனவும் அவர் கூறினார்.

இதேவேளை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்களுக்கு டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய இடங்களை அடையாளம் காணக்கூடியவாறு பயிற்சிகளை வழங்கி அவர்களை ஒவ்வொரு வீடுகளுக்கும் அனுப்பி பரிசோதிக்கவுள்ளோம். டெங்கு நுளம்பு பரவும் இடங்களை வைத்துள்ளோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (4-2)

# லண்டன் ஆடையலங்கார நிகழ்வில் இலங்கைப் பெண் பங்கேற்கிறார்

(கொழும்பு)

உலகிலேயே பிரபலமான ஆடை அலங்கார நிகழ்வுகளில் ஒன்றான லண்டன் பாஷன் வீக் எஸ்தனிகா நிகழ்வில் இந்தத் தடவை இலங்கையைச் சேர்ந்த ஆடைவடிமைப்பு நிபுணர் ஒருவரும் பங்குபற்றுகிறார்.

இலங்கை பாரம்பரிய ஆடையலங்காரங்கள் மற்றும் நவீன அலங்காரங்கள் ஆகியவற்றை இணைத்து புதிய உடையலங்காரங்களை வடிவமைத்துள்ள சரினி சூரியஹே இந்த வாய்ப்பை பெற்றிருக்கிறார்.

இலங்கை ஆடையலங்கார விழுமியங்கள் விருதை 2010 ஆம் ஆண்டு வென்ற சரினி ஆடையலங்காரத்தை தனது பட்டப்படிப்புக்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் கற்றவராவர்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் வாய்ப்பை பெற்ற முதலாவது இலங்கையர் என்பதில் அவர் பெருமையடைகிறார்.

உலகில் ஒரு முக்கிய ஆடை ஏற்றுமதி நாடாக இலங்கை திகழுகின்ற போதிலும் ஆடை வடிவமைப்புத்துறையில் அது ஜொலிக்கவில்லையே என்று கேட்டதற்குப் பதிலளித்த சரினி அதில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை தான் உணர்வதாகவும் தற்போது இலங்கையில் நிறைய உள்நாட்டு வடிவமைப்பாளர்கள் உருவாகி வருவதாகவும் குறிப்பிட்டார். (4-2)

# தொலைத்தொடர்பு அமைச்சர் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணம் வருகை தரும் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க யாழ். பண்ணையில் புதிதாக அமைக்கப்பட்ட ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தை காலை 9.30 மணியளவில் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்க உள்ளார்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (4-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## சிரத்தை[ஈடுபாடு]



இதோ பாருங்கள்! இத்தனை வருடங்களாக நான் இந்திய நாடு முழுவதும் சுற்றிப் பார்த்திருக்கிறேன். எவ்வளவோ உத்தமர்களைச் சந்தித்திருக்கிறேன். அருள் நிரம்பிப் பொங்கி வழிந்த உள்ளங்களைக் கண்டு மெய் சிலிர்த்திருக்கிறேன். அவர்கள் காலடியில் அமர்ந்த போது வலிமை வாய்ந்ததொரு மகத்தான சக்தி என் நரம்புகளில் ஓடி, இதயத்தில் பாய்ந்ததை உணர் ந்திருக்கிறேன். இப்போது உங்களிடம் நான் பேசும் இப் பேச்சுக்கள் அவர்கள் கூட்டுறவினால், அவர்கள் பாத கமலங்களை நான் தீண்டியதால் ஏற்பட்ட ஆற்றலின் விளைவே என்பேன்.

நமக்கு சிரத்தை வேண்டும். நாம் செய்யும் செயல்களில் ஈடுபாடு எழ வேண்டும். நம்மிடமே நமக்கு நம்பிக்கை எழவேண்டும். வலிமையே வாழ்வு, அது இன்மையே அழிவு, பலமே வாழ்க்கை, பலவீனமே மரணம். நம் நாடு வீழ்ச்சியடைந்தற்குக் காரணமே இந்த சிரத்தையின்மைதான். சிரத்தை எனும் கருத்தை நாம் இழந்து விட்டது தான்... எனவே முதலில் ஈடுபாடு மிக்க ஆண்மையாளர்களை உரு வாக்குவோம். நமக்குத் தேவை சூரர்கள் தாம். சிரத்தை இல்லாது போனால் மனிதர்கள் எப்படிச் சூரர்களாகத் திகழ முடியும்?... எந்தக் கல்வி மாணவரிடத்தே பண்பாட்டை உருவாக்க வல்லதோ, மன ஆற்றலை வளர்க்க வல்லதோ, அறிவுத் திறனை விரிவடையச் செய்யக் கூடியதோ அத்தகைய கல்வி தான் நமக்கு இப்போதே தேவை. மனிதன் தன்னைத்தானே தாங்குபவனாக, தன் சொந்தக் கால்களில் தலை நிமிர்ந்து நிற்பவனாகச் செய்யவல்ல கல்வியே நமக்கு வேண்டப்படுவது.

# சர்வதேச வணிகத் துறையில் எம்.பி.ஏ

வெளிநாடு என்றாலே ஒரு பெருமிதம் வந்து விடுகிறது. ஒரு விடயம் சர்வதேச அளவில் கையாளப்பட்டாலே, அதற்கு விரிவான அணுகுமுறையும், பரந்த சிந்தனையும் தேவை என்பது பொதுவான கருத்து. இதே கருத்துத்தான் வெளிநாட்டு வணிகத்திலும் கையாளப்படுகிறது. இன்றைய நிலையில், இலங்கை இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மிகுந்துள்ளன.

கடந்த 20 வருடங்களாக உலக வணிகம் (International Business) பெரிய மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. விரிவடைந்த சந்தை மற்றும் பலவிதமான தயாரிப்புக்கள் போன்றவை இன்றைய உலக சந்தையின் அம்சங்களாய் உள்ளன. எனவே சர்வதேச வணிகத்தில் எம்.பி.ஏ. முடித்த பட்டதாரிகளுக்கு தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் நிறைய வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

மேலும் சர்வதேச அளவில் வங்கிகள், நிதித்துறை நிறுவனங்கள், நிதிப் பாதுகாப்பு நிறுவனங்கள், முதலீட்டு நிறுவனங்கள், ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச வணிக ஆலோசனை மையங்கள் போன்றவைகளில் வேலை வாய்ப்புக்கள் நிறைந்துள்ளன. சர்வதேச வணிகத்தில் எம்.பி.ஏ. முடித்த பட்டதாரிகளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்களில், முக்கியமாக ஓட்டோமொமைல், எலக்ரோனிக்ஸ், கொம்ப்யூட்டர் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. மேலும் சர்வதேச வணிகங்கள் பெரும்பாலும் கடல் மற்றும் வான்வழியே நடப்பதால் சர்வதேச வணிகத்தில் எம்.பி.ஏ. முடித்த பட்டதாரிகள், விமானத்துறை மற்றும் கப்பல் துறைகளில் அபரிமித வேலைவாய்ப்புக்களைப் பெறுகிறார்கள்.

வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் பொருளாதார மேம்பாட்டு ஏஜென்சிகளிலும் இப்பட்டதாரிகளுக்கான தேவை நிறைய இருக்கிறது. இவை தவிர சுற்றுலா, டிரவல் மற்றும் விருந்தோம்பல் துறைகளிலும் இவர்களுக்கான வாய்ப்புக்கள் உள்ளன. விரும்பியவர்கள் ஆலோசனை மையங்களை ஏற்படுத்தி அதன்மூலம் நல்ல வருமானம் பெறலாம்.

சர்வதேச வணிக செயற்பாட்டில் தயாரிப்பு, இன் வாய்சிங், பேக்கிங், இன்சூரன்ஸ், போக்குவரத்து, சரக்கு ஏற்றி இறக்குதல், தரக்கட்டுப்பாடு, ஆய்வு, நிதி, ஆவணப்படுத்தல், சந்தைப்படுத்தல், ஏற்றுமதி, இறக்குமதி, சுங்கத் தீர்வை, சட்ட நடவடிக்கைகள், ஆபத்து மதிப்பீடுகள், சர்வேப் பணி, சேவை, கூட்டு செயல்பாடு, பணப் பரிமாற்ற நிர்வாகம், வரி விதிப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு போன்ற பலவகைப் பணிகள் அடங்கும். இவைத் தவிர இத்தகைய பணிகளில் ஈடுபட்டிருக்கும் மனித வளத்தை நிர்வகிப்பதும் இப்பட்டதாரிகளின் பணி வகைகளில் ஈடுபட்டிருக்கும் மனித வளத்தை நிர்வகிப்பதும் இப்பட்டதாரிகளின் பணி வகைகளில் சேர்கிறது.



கலாசார கலப்பு ஆய்வு முறை, கலாசார கலப்பு பேச்சுவார்த்தை மற்றும் தகவல் தொடர்பு வெளிநாட்டு பரிவர்த்தனை சந்தை மற்றும் அதன் நடவடிக்கைகள் போன்ற பலவித பணிநிலைகள் அவர்களுக்கு உள்ளன. இவை தவிர வேறுபல அமைப்பு ரீதியான பணிகளும் உள்ளன. சர்வதேச வணிகத்தின் எல்லையை இவ்வகைப் பட்டதாரிகள் விஸ்தரிக்கிறார்கள்.

மேலே குறிப்பிட்ட அம்சங்களின்படி சர்வதேச வணிகத்தில் எம்.பி.ஏ படித்தவர்களுக்கு ஏற்றுமதி நிறுவனங்கள் சுங்கத் தீர்வை மையங்கள், சிறப்பு பொருளாதார மண்டலங்கள், துறைமுகங்கள், சரக்கு ஏற்றி இறக்குமதி மையங்கள், போக்குவரத்து கழகங்கள், மெரைன் இன்சூரன்ஸ் நிறுவனங்கள் கப்பல் கம்பனிகள் வெளிநாட்டு வணிக இயக்குநரகம் ஏற்றுமதி இறக்குமதி மற்றும் வெளிநாட்டு பரிவர்த்தனை சேவைகள் போன்ற வைகளில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் கப்பலில் ஏற்றுவதற்கு முன் மற்றும் இறக்கிய பிறகான தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், ஏற்றுமதி சந்தை மையங்கள், ஏற்றுமதி -இறக்குமதி வணிகத்தில் ஈடுபட்டுள்ள பி.பி.ஓக்கள், வாடிக்கையாளர்கள் தொடர்பு மேலாண்மை, சர்வதேச நிதியம் சர்வதேச எக்கவுண்டிங் மற்றும் சர்வதேச நிதி மேலாண்மை போன்ற துறைகளை சார்ந்த நிறுவனங்களில் சர்வதேச வணிகத்தில் எம்.பி.ஏ படித்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் குவிந்துள்ளன.

சர்வதேச வணிகத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய சில துறைகள் இங்கே வழங்கப்பட்டுள்ளன. அவை,

- International market research.
- International marketing
- Export/Import management
- Merchandising
- Domestic/International Logistics
- Shipping
- Export/Import documentation.

அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

# கவர்ந்திழுக்கும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள்

ஒரு மேற்கத்திய நாட்டின் நூலகத்தில் புத்தகங்களிலும் லப்டொப்களிலும் தங்களின் கவனத்தை பதித்து



அமர்ந்திருக்கும் பல்வேறு நாட்டின் முகங்களை பார்க்கையில் உலகமயமாக்கலின் விளைவுகளை புரிந்து கொள்ளலாம். 2009 ஆம் ஆண்டு யுனெஸ்கோ மதிப்பீட்டின் படி, உயர்கல்விக்காக தங்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளில் சென்று படிப்பவர்க ளின் எண்ணிக்கை 2.8 மில்லியன் என்ற அளவில் உள்ளது. இந்த எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டு 8 மில்லியனாக உயரும். இதுபோன்று பல நாட்டு பல்கலைக்கழகங்களில் பல நாட்டு மாணவர்கள் பயின்று பல பகுதிகளுக்கு செல்வதன் மூலமாக உலகளாவிய அறிவு சுழற்சி ஏற்பட்டு பல நாடுகளுக்கும் நன்மை ஏற்படுகிறது.

தங்களின் தாய் நாட்டையும் உறவினர்களையும் விட்டு முன்பின் பார்த்திராத ஏதோ ஒரு நாட்டிற்கு செல்ல இவர்களை தூண்டுவது எது? மேலும் பெற்றோர்களும் மாணவர்களும் தங்களின் திறமைக்கு சவாலாக இருக்கக் கூடிய வெளிநாட்டு பல்கலைக்கழகத்தை எப்படி தேர்ந்தெடுக்கிறார்கள் மற்றும் அந்த முடிவு ஒரு மாணவனின் வாழ்க்கையை சிறப்பாக கட்டமைக்கிறதா?

மற்ற புலம்பெயர்பவர்களைப் போலவே, மாணவர்கள் வெளிநாடு செல்வதற்கான காரணங்களில் சிறப்பான வாழ்க்கை வளத்திற்கான தேடலும் முக்கியமானது. மேலும் வெளிநாட்டு பல்கலைக் கழ கத்தில் பட்டம் வாங்கினால் நல்ல வேலை கிடைக்கும் என்று மாணவர்கள் நம்புகிறார்கள். இதைத்தவிர ஆங்கில மொழியில் நன்கு புலமை பெறுவதும் முக்கிய அம்சமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. சர்வதேச வணிகம், மீடியா மற்றும் கல்வித்துறையில் ஆங்கில ஆதிக்கம் இருப்பதே இதற்கு காரணம்.

ஆனால், இத்தகைய காரணங்கள் தவிர்த்து வேறு சில முக்கிய பயன்விளைவுகளும் மாணவர்கள் வெளிநாடு சென்று படிப்பதில் இருக்கின்றன. முன்பின் பார்த்திராத ஒரு புதிய இடத்தில் சென்று வருடக்கணக்கில் படிப்பதானது, மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்து வாழ்க்கையை பற்றிய ஒரு பரந்த அளவிலான புரிதலை பெறச்செய்து வேறுபாடுகளை எதிர்கொள்ள உதவுகிறது.

அதேசமயம் வெளிநாட்டில் வாழ தொடங்குவதிலும் சில படிநிலைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக நீங்கள் பிரிட்டனில் படித்து அங்கேயே வாழ விரும்பினால், அங்குள்ள வாழ்க்கை முறைகளை பழக வேண்டும். அங்குள்ள பலதரப்பட்ட கலாசார பின்னணி கொண்ட நகரங்களின் சூழல்களை பழகுதல், அங்குள்ள உணவு முறைகளைப் பழகுதல் போன்றவற்றை நிறைவு செய்த பின்னரே அங்கே வாழ்வதைப் பற்றி ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க முடியும். இல்லையெனில் நல்ல தகுதியுடன் தாய் நாடு திரும்பி இங்கே சிறப்பான வாழ்க்கையை ஆரம்பிக்கலாம். தாங்கள் எதோவொரு விதத்தில் தேர்ந் தெடுக்கும் ஒரு வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் சிறப்பான கல்வியை தந்து பட்டம் வழங்கி அதன்மூலம் சமூகத்தில் நல்ல அந்தஸ்து கிடைக்கும் என்று எப்படி பெற்றோர்களும் மாணவர்களும் முடிவு செய்கிறார்கள்? எனவே பொதுவாக அவர்கள் வெளிநாட்டு மாணவர்கள் கொண்டுவரும் பணத்திலேயே குறியாக இருந்து தரமற்ற கல்வியை வழங்கும் சில பல்கலைக்கழகங்கள் விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

சமீபத்தில் டைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த வெளிநாட்டு பல்கலைக் கழகங்களின் தரநிலைகள் பற்றிய விபரம் உலகெங்கிலும் உள்ள இளங் கலை மற்றும் முதுகலை மாணவர்க ளின் தேர்ந்தெடுத்தலுக்கு உதவியாக இருக்கும். கல்வித்துறை நிபுணர்கள், வெளிநாட்டு மாணவர்கள் செலவழிக்க தயாராக இருக்கும் பணமானது, பல்கலைக் கழகங்களிடையே மாணவர்களை இழுக்கும் போட்டியை உருவாக்கி விட்டுள்ளது. நீங்கள் நிறைய செலவழிக்க தயாராக வந்தால் நீங்கள் விரும்பும் கல்வியை விரும்பும் வகையில் பெறுவதை உறுதி செய்யலாம் என்கின்றனர்.

# மாணவர்களை ஈர்க்கும் சிங்கப்பூர்

சிங்கப்பூர் என்ற ஒரு நாடு உலக வரைபடத்தில் ஒரு சிறு புள்ளி போல தெரிந்தாலும் பிராந்தியத்திலேயே சிறந்த உலகளாவிய கல்வி நிறுவனங்களைக் கொண்ட இடமாக திகழ்கிறது.

பன்முக கலாசாரம் மற்றும் உலகளாவிய தொடர்புகள் ஆகியவை சிங்கப்பூரை, உலகளாவிய கல்விக்கான ஒரு சிறந்த இடமாக ஆக்கியுள்ளன. இங்கு பயிலும் சர்வதேச மாணவர்களுக்கு புதுப்பிக்கப்பட்ட உலகளாவிய பார்வை கொண்ட சிறப்பான பாடத்திட்டங்களைக் கொண்ட கல்வி கிடைக்கிறது. மேலும் எப்போதும் நினைவில் கொள்ளத்தக்க கல்வி அனுபவமும் இங்கே கிடைக்கிறது.



சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (என்.யு.எஸ்) நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (என்.டி.யு) மற்றும் சிங்கப்பூர் முகாமைத்துவ பல்கலைக் கழகம் (எஸ். எம்.யு) போன்றவை இங்குள்ள சிறந்த மற்றும் உலகளவில் பெயர்பெற்ற கல்வி நிறுவ்னங்களாகும். மேலும் உலகின் 16 முக்கிய பல்கலைக்கழகங்கள் (உதாரணம்: சிகாகோ பல்கலை, நெவேடா பல்கலை) தங்களின் சொந்த வளாகங்களை கொண்டிருந்தோ, அல்லது பிற உள்ளூர் கல்வி நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொண்டோ, சிங்கப்பூரில் தமது இருப்பை உறுதிப்படுத்துகின்றன.

மேலும், எஸ்.ஐ.எம்., எம்.டி.ஐ.எஸ். போன்ற தனியார் கல்வி நிறுவனங்களும் புகழ்பெற்று விளங்குகின்றன. மேலும் பல புகழ்பெற்ற பொலிடெக்னிக் கல்வி நிறுவனங்களும் உள்ளன. இங்கே தொழில்துறை நிபுணர்களுக்காக எக்சிகியூடிவ் எம்.பி.ஏ., முதுநிலை படிப்புக்கள், திறந்த வெளி சேர்க்கை படிப்புக்கள் மற்றும் தேவைக்கேற்ற படிப்புக்கள் போன்றவை வழங்கப்படுகின்ற. சட்டதிட்டங்கள் நெகிழ்வாகவும், கல்வி கட்டணம் தாக்குபிடிக்கக் கூடியதாகவும் இருப்பதால் பலரும் விரும்பும் இடமாக சிங்கப்பூர் இருக்கிறது.

தற்போதைய நிலையில் இந்திய மாணவர்களால் அதிகம் விரும்பப்படும் இடமாக சிங்கப்பூர் மாறி வருகிறது. இங்கு கல்வி கற்பதன் மூலமாக 21 ஆம் நூற்றாண்டில் போட்டியிட முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். மேலும் சிங்கப்பூரில் கல்வியானது மாணவர்களுக்கு பல்துறை அனுபவங்கள், சிறந்த தகவல்தொடர்பு திறன் மற்றும் சவால்களை சமாளிக்கும் திறன் ஆகியவற்றை தருகிறது என்று மாணவர்கள் நம்புகிறார்கள்.

# சங்கா, டில்சான், மத்யூஸ் அபாரம்

# இலங்கை முதல் இன்னிங்ஸில் முன்னிலை



மத்யூஸ்

(கொழும்பு)

சங்கக்கார,டில்சான், மத்யூஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி முதலாவது இன்னிங்சில் 6 விக்கெட்டுக்களையிழந்து 428 ஓட்டங்களை எடுத்து 112 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் வந்துள்ள அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றதுடன் இரண்டாவது டெஸ்ட் சமனிலையில் முடிபுற்றது.

இந் நிலையில் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 16 ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித் தலைவர் திலகரட்ண டில்சான் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்சில் சகலவிக்கெட்டுக்களையுமிழந்து 316 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கல் ஹசி 178 பந்துகளில் (12 பவுண்டரிகள்,2 சிக்ஸ்சர்கள் உட்பட) 118 ஓட்டங்களையும், மார்ஷ் 81, பொண்டிங் 48, ஹடின் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அறிமுக வீரர் எரங்கா 4 விக்கெட்டுக்களையும், வெலகெதர 3 விக்கெட்டுக்களையும், லக்மல் 2 விக்கெட்டுக்களையும், ஹேரத் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு பரணவிதான–திரிமன்னே ஜோடி சுமாரான ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் திரிமன்னே28 ஓட்டங்களுடனும் பரணவிதான 46 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இலங்கை அணி 97 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்திருந்தது.

அடுத்து மூன்றாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த சங்கக்காரவும் மஹேல ஜெயவர்த்தனவும் அனுபவ ஆட்டத்தின் மூலம் அணியை தூக்கி நிறுத்தினர்.

இதில் தனது 100ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடிய குமார் சங்கக்கார 86 பந்துகளில் அரைச்சதம் பெற்றார்.

மறுமுனையில் 117 பந்துகளில் அரைச்சதம் கடந்த மஹேல ஜெயவர்த்தன 51 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து அணித்தலைவர் டில்சான் களமிறங்க மறு முனையில் குமார் சங்கக்கார 176 பந்துகளில் (10 பவுண்டரிகள் உட்பட) 79 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து மத்யூஸ் களமிறங்க மறுமுனையில் அதிரடியைத் தொடர்ந்த டில்சான் 70 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். எனினும் அணித்தலைவர் டில்சான் 131 பந்துகளில் (14 பவுண்டரிகள் உட்பட) 83 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த பிரசன்ன ஜெயவர்த்தன சிறப்பாக ஆட இலங்கை அணி 400 ஓட்டங்களைத் தொட்டது.

மறுமுனையில் மத்யூஸ் 119 பந்துகளில் அரைச்சதத்தை பூர்த்திசெய்து நம்பிக்கையளித்தார். இதில் பிரசன்ன ஜெயவர்த்தன 86 பந்துகளில் (3 பவுண்டரிகள்,2 சிக்ஸ்சர்கள் உட்பட) 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபின் போது இலங்கை அணி முதலாவது இன்னிங்சில் 6 விக்கெட்டுக்களையிழந்து 428 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அஞ்சலோ மத்யூஸ் 85 ஓட்டங்களுடனும் எரங்க 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்து வீச்சில் ஹேறப்லான்ட், சிடில் தலா 2 விக்கெட்டுக்களையும்,ஜோன்ஷன், வோட்ஷன் தலா ஒரு விக்கெட்டினையும் சாய்த்த னர்.

இப்போட்டியில் இலங்கை அணி 4 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 112 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ள நிலையில் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.



டில்சான்

## சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் தகுதிச்சுற்று இன்று ஆரம்பம்

சம்பியன்ஸ் லீக் இருபது–20 தொடர் எதிர்வரும் 23 ஆம் திகதி பெங்களூரில் தொடங்குகிறது.

இதில் மொத்தம் 10 அணிகள் கலந்து கொண்டு சம்பியன் வெல்ல மோதுகின்றன. போட்டிகள் சென்னை, பெங்களூர் மற்றும் கொல்கத்தாவில் நடக்கிறது.

ஐ.பி.எல்லில் விளையாடிய சென்னை சுப்பர்கிங்ஸ்,மும்பைஇந்தியன்ஸ்,பெங்களூர் ரோயல் சலஞ்ஜர்ஸ் மற்றும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த வாரியர்ஸ், தெற்கு ஆஸி. மற்றும் தென்ஆபிரிக்காவின் கிங் கோப்ராஸ், இங்கிலாந்தின் நியூசவுத் வேல்ஸ் ஆகிய 7 அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. மீதமுள்ள 3 இடங்களுக்கு 6 அணிகள் பலப் பரீட்சை நடத்துகின்றன.

இந்த 6 அணிகள் மோதும் தகுதி சுற்று ஆட்டங்கள் இன்று ஐதராபாத்தில் தொடங்குகின்றது.

கொல்கத்தா நைற்றைடர்ஸ், டிரினிடாட், ஆக்லாந்து, சோமர்செட், லீசெஸ்டர்ஷயர், றுகுணு ஆகிய அணிகள் தகுதி சுற்றில் பங்கேற்கின்றன. தகுதி சுற்று வருகிற 21 ஆம் திகதி வரை நடக்கிறது.

இன்று நடைபெறும் முதல் ஆட்டத்தில் டிரினிடாட் - றுகுணு அணிகளும் மற்றொரு ஆட்டத்தில் கொல்கத்தா நைற்றைடர்ஸ்- ஆக்லாந்து அணிகளும் மோதுகின்றன. தகுதி சுற்று ஆட்டங்கள் அனைத்தும் ஐதராபாத்தில் நடக்கிறது.

புள்ளிகள் அடிப்படையில் முதல் 3 இடங்களை பிடிக்கும் அணிகள் பிரதான சுற்றுக்கு தகுதி பெறும்.

பிரதான சுற்று போட்டி 23 ஆம் திகதி பெங்களூரில் கோலாகலமாக தொடங்குகின்றது.

தொடக்க ஆட்டத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்–வாரியர்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

டோனி தலைமையிலான சென்னை சுப்பர்கிங்ஸ் தனது முதல் ஆட்டத்தில் 24 ஆம் திகதி சச்சினின் மும்பை இந்தியன்சை எதிர்கொள்கிறது. இறுதிப் போட்டி ஒக்டோபர் 9 ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கிறது.









ஹற்றன் நஷனல் வங்கியின் சங்கானைக்கிளையின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட சங்கானை கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி நேற்று சங்கானையில் நடைபெற்றது. இதில் வீரரொருவர் இலக்கை அடைவதனை முதலாவது படத்திலும் முதல் இடம்பெற்ற வீரருக்கு ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.ஜெயராஜசிங்கம் பரிசில் வழங்குவதையும் வெற்றிபெற்ற வீரர்களுடன் வங்கி உத்தியோகத்தர்களையும் அடுத்த இரு படங்களில் காணலாம்.

# தமிழ் அரசியல் தலைவர்கள் சிலருக்கு சுயநிர்ணயத்தில் தளம்பல் உள்ளது!

## மனந்திறந்து பேசினார் சிறிதரன் எம்.பி



தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல் தலைவர்கள் சிலரிடையே சுயநிர்ணயம் பற்றிய தளம்பல் உள்ளது. இதன் காரணமாக அவர்கள் பேச வேண்டிய இடங்களில் பேசாமல் இருந்து விடுகின்றார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கூறியுள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் கீழ் இயங்கும் நூலகங்களுக்கு நூல்களை வழங்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாம் எதை எடுத்துக் கொண்டாலும் எமக்கு பின்னால் எமக்காக ஆயிரக்கணக்கான தியாகிகள் உயிர் கொடுத்துள்ளார்கள். இலட்சக்கணக்கான மக்கள் இரத்தம் சிந்தி உயிர் துறந்து போயுள்ளார்கள் என்பதை நாம் என்றும் மறந்துவிடக்கூடாது.

இன்று தமிழ் மக்களின் தலைவர்கள் என்று மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சிலருக்கு சுயநிர்ணய உரிமை பற்றி தளம்பல்கள் இருக்கின்றது. சுயநிர்ணய உரிமை பற்றி பேசவேண்டிய இடங்களில் சிலர் மௌனம் காக்கின்றார்கள்.

சுயநிர்ணய உரிமை, தாயகம், தேசியம் என்ற கோட்பாடுகளுக்காக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அவர்கள். ஆனால் பேச்சுவார்த்தை மேடைகளில் தேசிய அபிலாசைகளை மனம் திறந்து பேச சிலதலைவர்கள் வெட்கப்படுகின்றார்கள். மதில்மேல் பூனையாக இருக்கின்றார்கள். வடகிழக்கு இணைந்த தாயகம், சுயநிர்ணய உரிமை, தேசியம் என்ற விஞ்ஞாபனங்களுக்காக வாக்களித்த தமிழ் மக்களை யாரும் ஏமாற்ற முடியாது.

நழுவுகின்றவர்களை மக்கள் நிச்சயமாக தண்டிப்பார்கள். நாம் சுயநிர்ணய கோட்பாடுகளில் இருந்து என்றும் மாறப்போவதில்லை. எமது தேசிய அபிலாசைகளுக்கான பயணம் தொடரும். வட்டுக்கோட்டை தீர்மானம் ஜனநாயக வழி உரிமைகளுக்கான அடிநாதமாக விளங்குகின்றது.

எனவே பல்வேறு தலைமுறைகள் தலைமைகள் ஊடாக வந்தவர்களை ஒரே மேடையில் வைத்து தமிழ் மக்கள் பார்ப்பது சுயநிர்ணய கோட்பாட்டின் அடிப்படையிலேயே என்பதை யாரும் மறக்கக்கூடாது. மக்கள் தந்திருக்கின்ற ஆணையின்படி வெளிப்படையான அரசியல் பயணம் நடக்க வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார். (ந-5)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த வருடத்தை விட 35.8 சதவீதம் அதிகரித்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேகுணவர்தன இதனைக் குறிப்பிடார்.

எதிர்காலத்தில் மேலும் சில சர்வதேச நாடுகளுடன் புதிய விமான சேவைகளை ஆரம்பித்து சுற்றுலாப் பயணிகளை வரவழைத்துக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாக பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## வன்னி இறுதி யுத்தத்தின்...

63 வரையில் உயர்வடைந்ததாகவும் அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் நாள் ஒன்றுக்கு சராசரியாக காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 184 எனவும் பெப்ரவரியில் இந்த எண்ணிக்கை 145 ஆகவும் மார்ச்சில் அந்த எண்ணிக்கை 115 ஆகவும் காணப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்திய மருத்துவர்கள், மதகுருமார், உதவி அரசாங்க அதிபர்கள், சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் கடமையாற்றிய 213 உள்நாட்டு பணியாளர்கள் போன்ற தரப்பினரிடம் ஐக்கிய நாடுகள் அமைப்பு தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும், இவை நம்பகமானவை எனவும் றொபேர்ட் ஓ பிளேக் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு கரையோர பகுதி வழியான இரண்டாவது யுத்த சூனிய வலயத்தை அரசாங்கம் அறிவித்த பெப்ரவரி 12 ஆம் திகதி வரையில் 2ஆயிரத்து 452 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 5ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

யுத்த சூனிய வலயங்களின் மீது எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக குறிப்பிட்டப்பட்டுள்ளது. தேவாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 400 சிறுவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் பலவந்தமான முறையில் படையில் இணைத்துக் கொண்டதாக றொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

## சர்வதேச ...

இதேவேளை தருஸ்மன் அறிக்கையை ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டமை தொடர்பாக இலங்கை அரசாங்கம் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் தனது எதிர்ப்பை நேரில் தெரிவிக்கும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ந-5)

## ஐ.நா.பொது ...

பெறும் முதலாவது சந்திப்பு இதுவாகும்.

பான்கீ மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையாக தாக்கல் செய்யப்பட்டமை குறித்து தமது அதிருப்தியை ஜனாதிபதி வெளியிடுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பொது அமர்வின் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோர் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஏற்பாட்டில் இடம்பெறும் இரவுவிருந்துபசார நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந் நிலையிலே அமெரிக்காவிற்கு விஜயம்செய்துள்ள ஜனாதிபதி இங்கு மேலும் சில இராஜ தந்திரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வார் என அரச தரப்புதகவல்கள்வெளியிட்டுள்ளன. (ந-3)

## போர்க் குற்ற...

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது இரு தரப்பினாலும் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கான அழுத்தங்களை ஏற்படுத்துவதற்கு பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு தவறிவிட்டதாக பிரித்தானிய நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழு குற்றம் சுமத்தியிருந்தது.

இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கடந்த வார இறுதியில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் பதிலளித்த போதே இலங்கை அரசிற்கு காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளமை குறித்து தெரியப்படுத்தியுள்ளார்.

இவ்வாண்டின் இறுதிக்குள் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் சாதகமான மேம்பாடுகளை வெளிப்படுத்தத் தவறினால் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள தொடர்பில் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் கோரிக்கைக்கு பிரித்தானியா ஆதரவு வழங்குமென வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இருதரப்பினாலும் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே பிரித்தானிய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றும் வில்லியம் ஹேக் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழு, சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் மேற்கத்தேய நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

அத்துடன் இப்போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமைமீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் ஆகியோரும் வலியுறுத்தி இருந்தனர்.

இதேவேளை, பிரித்தானியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட் மற்றும் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இக்கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

ஆனால் இத்தகைய விசாரணைகள் மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வருவதுடன் போர்க்குற்றச்சாட்டுகளை முறியடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## தவறிவிட்டது

இராசேந்திரம் யோகேஸ்வரன் உடைய கடவுச்சீட்டு 15.09.2011 அன்று வியாழன் மதியம் நெல்லியடிக்கும் நாவலடிச் சந்திக்கும் இடைப்பட்ட பிரதான வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொலைபேசி இல: 0779499809 0774042675

(சி-4485)

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள்
அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு
DMI COMPUTER EDUCATION
75% OFF
Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Computerized Accounting
Tally Financial Accounting Training
Diplima in Video Production & Multimedia
Master Diploma in Multimedia & Animation
2D & 3D Animation AutoCAD
ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் Spoken English பயிற்சிமையம்.
veta® Experts in English Training
☑அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.
அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு V - 19/09/2011 9.30 am
பிரிவு VI - 24/09/2011 9.30 am
DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலீதாஸ் ஜுவல்லரி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில்
இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134
(சி-4418)

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
aramex
யாழ்ப்பாணம்
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.